# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

புதன்கிழமை 01.12.2021

supeedsam.com supeedsam@gmail.com









# 'ஒமிக்ரோன்' தடுப்பூசிக்கு கட்டுப்படுமா என்பது சந்தேகம்

(காந்தன்)

'ஒமிக்ரோன்' கொவிட் 19 வைரஸ் தொற்றின் தாக்கம் எவ்வாறானது என்பது குறித்தோ அல்லது தடுப்பூசிகளுக்கு இந்த வைரஸ் கட்டுப்படுமா என்பது குறித்தோ இதுவரை கண்டறியப்படவில்லை என சபையில் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, தடைசெய்யப்பட்ட நாடுகளில் இருந்து கடந்த 14 நாட்களுக்கு முன்னர் இலங்கைக்கு எவரும் வந்துள்ளனரா என்ற விசாரணைகளை முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

02 ஆம் பக்கத்தில்...

## நாடு மீண்டும் முடக்கப்படுமா?

(காந்தன்)

நாட்டை மீண்டும் முடக்குவது தொடர்பில் அரசாங்கத்திற்கு எந்தவித எதிர்பார்ப்பும் இல்லை.

எதிர்வரும் நத்தார் பண்டிகை காலத்தில் நாட்டை முடக்குவது தொடர்பில் உத்தியோகபூர்வமான கலந்துரையாடல்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ பத்திரன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற

02 ஆம் பக்கத்தில்...

## வரலாற்றின் முதல் தடவை



(யாழ்.கீதன்)

வரலாற்றின் முதல் தடவையாக யாழ். மாநகரசபை அமர்வு செங்கோலுடன் மாநகர முதல்வர் மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

மாநகர முதல்வர் வி. மணிவண்ணனின் வேண்டுகோளுக்கு அமைய அண்மையில் குகபதமடைந்த நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் 10ஆவது நிர்வாக அதிகாரி குகஸ்ரீ குமாரதாஸ மாப்பாண முதலியாரின் நினைவாக நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானம் யாழ்.மாநகர சபைக்கு செங்கோல் ஒன்றினை வழங்கியது.

நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் 11ஆவது நிர்வாக அதிகாரி குமரேஷ் சயந்தன குமாரதாஸ் மாப்பாண

02 ஆம் பக்கத்தில்...

## கோட்டகலையில் தோட்ட தொழிலாளியின் வீட்டில் வெடித்தது சிலிண்டர்



(க.கிஷாந்தன்)

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை பத்தனை பெய்திலி தோட்டத்தில் தோட்ட தொழிலாளியின் வீட்டில் நேற்று மாலை 6 மணியளவில் வெடிப்பு சம்பவம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## சிக்கல் இருந்தால் அழையுங்கள்

லிட்ரோ சமையல் எரிவாயு தொடர்பில் சிக்கல்கள் இருப்பின் அறிவிக்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

லிட்ரோ சமையல் எரிவாயு நிறுவனத்தின் தலைவரினால் வெளியிடப்பட்டுள்ள விசேட அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## மாதகலில் கடற்படை முறுகல் காணி சுவீகரிப்பு முறியடிப்பு



(யாழ்.கீதன்)

யாழ்ப்பாணம் மாதகல் கிழக்கு பகுதியில் கடற்படையினரின் தேவைக்காக தனியார் காணிகளை சுவீகரிக்கும் முயற்சி, தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

மாதகல் கிழக்கு ஜெ 150 கிராம உத்தியோகத்தர் பிரிவு, குசுமந்துறையில் தனியாருக்கு சொந்தமான 1 பரப்பு காணி கடற்படையினரின் தேவைக்கு சுவீகரிப்புக்காக அளவீட்டு பணிகள்

02 ஆம் பக்கத்தில்...

## இலங்கையை காப்பாற்றியது நாமே

### சீனத்தூதரகம் அறிவிப்பு

மேற்குலக கடன் பொறியில் இருந்து இலங்கையை சீனா காப்பாற்றியதாக கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளது.

இலங்கை இதுவரை பெற்றுக்கொண்டுள்ள சர்வதேச கடன்களில் சீனாவிடம் 10 வீதமான கடனையே பெற்றுள்ளது. அது 3 ஆயிரத்து 388.2 மில்லியன் டொலர்கள் என இலங்கை மத்திய வங்கியை மேற்கோள்காட்டி

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பு சீலாமுனை பகுதியில் ஆணொருவர் தீயிட்டு தற்கொலை



(மட்டுநிருபர்)

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீலாமுனை பகுதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்து எரிகாயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சீலாமுனை,ஆனந்தன் வீதியிலிருந்து வீட்டில் தனிமையிலிருந்த தி.சத்தியராஜன் என்னும் 69வயதுடைய நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...






## கிராமப்புற வைத்தியசாலைகளுக்கும் வளங்கள் பங்கிடப்பட வேண்டும்



(எஸ்.சபேசன்)

நகரப்புற வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்ற வளங்களைப் போன்று கிராமப்புற வைத்தியசாலைகளுக்கும் வளங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் அப்போதுதான் கிராமப்புற மக்கள் எவ்வித தங்குதடைகளுமின்றி வைத்தியசேவைகளைப் பெறுவார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் த. கலையரசன் தெரிவித்தார்


பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பாக இடம்பெற்ற விவாதத்தில்

02 ஆம் பக்கத்தில்...






## காணாமல் போன மீன்பிடி படகு சென்னையில் கரையோதுங்கியது



(ந.குகதர்சன்)

வாழைச்சேனையில் இருந்து கடந்த செப்டம்பர் மாதம் 26ம் திகதி ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்று காணாமல் போன படகு நேற்று சென்னை காசிமேடு பகுதியில் கரையொதுங்கியுள்ள நிலையில் காணாமல் போன கடற்றொழிலார்களின் குடும்ப உறுப்பினர்கள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு தங்களது மனமார்ந்த

02 ஆம் பக்கத்தில்...







# திருமலை இ.போ.ச. சாலை மாணவர்களுக்கு பருவகால பயணசீட்டு வழங்கல்

(கதிரவன்)

இலங்கை போக்குவரத்து சபை திருகோணமலை சாலை மாணவர்களுக்கு பருவகால பயணசீட்டு வழங்கலை விஸ்தரித்துள்ளது.

இதுவரை காலமும் சாலை அலுவலகத்தில் இது வழங்கப்பட்டு வந்தது.

மார்கழி மாதத்திற்கான பருவகால பயணசீட்டுகளை மத்திய பேருந்து நிலையத்தில் வைத்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் தமது பருவகால சீட்டுகளை மார்கழி மாதம் 5ம் திகதி வரை மத்திய பேருந்து நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

பிரதி மாதமும் தாம் மாணவர்களின் நன்மை கருதி இரண்டு இடங்களிலும் வழங்க உள்ளதாக சாலை கணக்காளர் ந.ராஜேஸ்வரன் தெரிவித்தார்.

# காணாமல் போன மீன்பிடி படகு சென்னையில்

நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

வாழைச்சேனையில் இருந்து கடந்த செப்டம்பர் மாதம்; 26ம் திகதி ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற காணாமல் போன நிலையின் நேற்று இரவு 11.30 மணியளவில் சென்னை காசிமேடு பகுதியைச் சேர்ந்த படகின் மூலம் திருவள்ளூர் மாவட்டம் காட்டூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அதானி துறைமுகத்தில் உள்ளே நுழைந்துள்ளதாக கடற்தொழில் அமைச்சின் மூலம் தகவல் கிடைத்துள்ளதாக காணாமல் போனவர்களின் உறவினர்கள்; தெரிவித்தனர்.

கடந்த செப்டம்பர் மாதம் 26ம் திகதி வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற குறித்த படகு மீன்பிடித்துக் கொண்டிருக்கும் பொழுது முதல் நாளிலேயே படகு என்ஜின் பழுது ஏற்பட்டு விட்டது என்றும் மேலும் காற்றுவாக்கில் அந்தமான் பகுதிக்கு சென்றதாகவும் நேற்று (செவ்வாய்க்கிழமை) சென்னை காசிமேடு பகுதியைச் சேர்ந்த IND TN 02 MM 2543 என்ற படகின் மூலம் இரவு 11.30 மணிக்கு திருவள்ளூர் மாவட்டம் காட்டூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அதானி துறைமுகத்தில் உள்ளே நுழைந்துள்ளதாகவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனக்கு தொலைபேசியில் தெரிவித்தாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

காணாமல் போன கடற்றொழிலார்களின் குடும்ப உறுப்பினர்கள் கடற்றொழில் அமைச்சர் டக்டஸ் தேவானந்தா கடற்றொழில் அமைச்சின் அதிகாரிகள், மாவட்ட கடற்றொலில் அதிகாரிகள், இந்திய கடலோர காவல் படை அதிகாரிகள் இதனோடு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் அனைவருக்கும் தங்களது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

# மட்டக்களப்பு சீலாமுனை பகுதியில் ஆணொருவர்

மண்ணெண்ணெய் ஊற்றப்பட்டு தீயிட்டு குறித்த நபர் எரிந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபருக்கு அருகில் கடிதம் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் அதனடிப்படையில் அவர் தற்கொலைசெய்துகொண்டாரா என்பது தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு வருகைதந்த மாவட்ட குற்றத்தடவியல் பிரிவு பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அத்துடன் களுவாஞ்சிகுடி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம் பிரேதத்தை பார்வையிட்டதுடன், விசாரணைகளை முன்னெடுத்து, பிரேதத்தை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று உடற்கூற்றுப் பரிசோதனைக்குட்படுத்தும்படி பொலிஸாரிடம் உத்தரவிட்டுள்ளார்.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீலாமுனை பகுதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்து எரிகாயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சீலாமுனை,ஆனந்தன் வீதியிலிருந்து வீட்டில் தனிமையிலிருந்த தி.சத்தியராஜன் என்னும் 69வயதுடைய நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மண்ணெண்ணை ஊற்றப்பட்டு தீயிட்டு குறித்த நபர் எரிந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபருக்கு அருகில் கடிதம் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் அதனடிப்படையில் அவர் தற்கொலைசெய்துகொண்டாரா என்பது தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு வருகைதந்த மாவட்ட குற்றத்தடவியல் பிரிவு பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அத்துடன் களுவாஞ்சிகுடி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம் பிரேதத்தை பார்வையிட்டதுடன், விசாரணைகளை முன்னெடுத்து, பிரேதத்தை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று உடற்கூற்றுப் பரிசோதனைக்குட்படுத்தும்படி பொலிஸாரிடம் உத்தரவிட்டுள்ளார்.

# இலங்கையை காப்பாற்றியது நாமே

சீனத் தூதரகம் தனது டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம், ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை குத்தகைக்கு விட தயாராகிய நேரத்தில் சீனா உதவுவதற்காக முன்வந்து, இலங்கையை கடன் பொறியில் இருந்து காப்பாற்றியது எனவும் சீனத் தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது.

சர்வதேச பிணை முறிப் பத்திரங்களுக்கு செலுத்த டொலர் இல்லாத காரணத்தினாலேயே இலங்கை கடந்த 2017 ஆம் ஆண்டு ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை குத்தகைக்கு வழங்கியது.

இதனை விடுத்து, சீனாவின் எக்சிம் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனுக்காக இலங்கை அரசாங்கம் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கவில்லை எனவும் சீனத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

இதனடிப்படையில் நோக்கினால், இலங்கை சிக்கலிருந்த சர்வதேச கடன் பொறியில் இருந்து சீன அரசாங்கம் காப்பாற்றியுள்ளது.

# நாடு மீண்டும் முடக்கப்படுமா?

ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாட்டில் மிகவும் வெற்றிகரமான தடுப்பூசித் திட்டத்தை அரசாங்கம் மிகவும் சிரமத்துடன் அமுல்படுத்தியது. அதன் பின்னர் நாடு திறக்கப்பட்டாலும் நாட்டில் இந்நோய் முற்றாகக் கட்டுப்படுத்தப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

மேலும், நாட்டில் பெரும்பாலான மக்கள் முழுமையாக தடுப்பூசியினை பெற்றுக் கொண்டுள்ளனர். சிறு வயதினர்களளுக்கு கூட தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. இதனூடாக நாம் யாரும் பாதுகாப்பாக உள்ளோம் என்று அர்த்தம் கொள்ளக் கூடாது என்றும் அவர் கூறினார்.

அத்துடன், எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் மக்கள் தமது பாதுகாப்பிற்கு பொறுப்பாக இருக்க வேண்டும். தமது பிள்ளைகள் மற்றும் குடும்பங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, சுகாதாரத் துறையினரால் மீண்டும் மீண்டும் வலியுறுத்தும் சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றி, முகக் கவசம் அணிந்து சமூக இடைவெளியைப் பேணி செயற்படுமாறும் அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை, மூன்றாவது டோஸ் தடுப்பூசியை வழங்க அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளது. ஆனால் அண்மையில் பதிவாகிய ஒமிக்ரோன் வைரஸ் திரிபினால் உலகில் ஆபத்தான சூழ்நிலையொன்று மீண்டும் உருவாகி வருவதாகவும் அவர் கூறினார்.

இதுவரை தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவர்கள் காலம் தாழ்த்தாது, விரைவில் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுங்கள். மக்களின் ஆரோக்கியம் மற்றும் நாட்டின் பொருளாதார பாதுகாப்பு மற்றும் சமூக பாதுகாப்பு ஆகியவை நம் அனைவரின் விவேகமான மற்றும் பாதுகாப்பான நடத்தையில் தங்கியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கொட்டகலையில் தோட்ட தொழிலாளியின்

வீட்டில் இருந்த கேஸ் சிலிண்டரில் பொருத்தப்பட்டிருந்த ரெகுலேட்டர் வெடித்துள்ளதுடன் ரெகுலேட்டரின் துண்டுகளையேனும் காண முடியவில்லை மேலும் அதற்கான இறப்பர் குழாயும் முழுமையாக எரிந்துள்ளது.

தோட்ட தொழிலாளிகளான பெற்றோர்கள் தொழிலுக்கு சென்றிருந்த நிலையில் பாடசாலையில் இருந்து வீடு திரும்பிய பெண் பிள்ளை தண்ணீரை சூடாக்குவதற்கு சமையல் அறையில் இருந்த கேஸ் குக்கரை பற்றவைத்துவிட்டு வீட்டினுல் இருந்த பொழுது பாரிய சத்தத்துடன் கேஸ் குக்கர் வெடித்துள்ளது.

கேஸ் குக்கர் வெடிப்பு மற்றும் தீப்பற்றல் காரணமாக கேஸ் குக்கர் முழுமையாக சேதமடைந்துள்ளதுடன் வீட்டின் மின் கட்டமைப்பு மற்றும் பொருட்களும் சேதமடைந்துள்ளன.

சமையலறையில் எவரும் இல்லாததன் காரணமாக எவருக்கும் ஆபத்துக்கள் ஏற்படவில்லை.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொள்வனவு செய்யப்பட்ட கேஸ் சிலிண்டரே இவ்வாறு வெடித்துள்ளது.

குறித்த நேரத்தில் பெற்றோரும் வீடு திரும்பிய நிலையில் கேஸ் சிலிண்டரை தந்தை தூக்கி வெளியில் வீசி எறிந்ததால் எற்படவிருந்த பெரும் சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது. அத்தோடு, ஒன்றுகூடிய அயலவர்களும் பரவிய தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இவ்விடயம் சம்பந்தமாக குறித்த பகுதிக்கான கிராம உத்தியோகத்தருக்கும் திம்புள்ள பத்தனை பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கிராமப்புற வைத்தியசாலைகளுக்கும் வளங்கள் பங்கிடப்பட வேண்டும்

கலந்துகொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்;

கிராமப்புற வைத்தியசாலைகளைப் பொறுத்தவரையில் அப்பிரதேசம் போக்குவரத்து வசதியற்றபிரதேசமாக இருக்கின்றது. அங்கு ஏதாவது பாரிய சிகிச்சைகளைப் பெறவேண்டுமானால் நாகரப்பு வைத்தியசாலைகளை நாடவேண்டியே ஏற்படுகின்றது இதனால்தான் இப்பகுதியில் இருக்கின்ற கிராமப்புற வைத்தியசாலைகளுக்கு, நகரப்புகுற வைத்தியசாலைகளைப் போன்று வளங்களை வழங்கவேண்டும்.

அம்பாரை மாவட்டத்தில் பல போராட்டத்தின் மத்தியில் 2020 ஆண்டு பனங்காடு,மல்வத்தை, அன்னமலைவேப்பையடி வைத்தியசாலைகள் தரமுயர்த்தப்பட்டன இதற்காக சுகாதார அமைச்சருக்கு நன்றி தெரிவிக்கின்றேன். ஆனால் அங்கு வளங்கள் சரியானதாக இல்லாத நிலையில் இயங்கிவருகின்றது பாரிய சிகிச்சைகளைப் பெறவேண்டுமானடிடல் நகரப்புற வைத்தியசாலைகளுக்குச் செல்லவேண்டி ஏற்படுகின்றது.

இலங்கையில் சுகாதாரத் துறையானது ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மேலோங்கிய நிலையில் இருக்கின்றது அந்த வகையில் சுகாதாரத்துறையில் பணிபுரிகின்றவர்கள் மற்றும் சுகாதார அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறுவதாக இருந்தாலும் 2022 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டினைப் பார்கின்றபோது கடந்த ஆண்டுகளை விட சுகாதாரத்துறைக்கு குறைந்த அளவிலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கின்றது.

இந்நாட்டிலே 25 மாவட்டங்கள் இருக்கின்றன நான் அம்பாரை மாவட்டத்தினைப் பிரதி நிதித்துவப் படுத்தி இருக்கின்றேன் இம்மாவட்டத்தில் இரண்டு சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவுகள் இருக்கின்றன சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி அம்பாரையில் ஒன்றும் தமிழ்பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி கல்முனையில் ஒன்றும் இருக்கின்றது.

இப்பணிமனைகள் 2017 ஆம் ஆண்டுக்கு முன்னர் மிகவும் மோசமான பணிகளையே செய்திருந்தது அதாவது இப்பிராந்திய சுகாதாரப் பணிமனையானது தமிழ்ப் பிரதேசங்களை அரசியல் தலையீடு காரணமாக திட்டமிட்டு புறக்கணித்ததுடன் அபிவிருத்தியிலும் பின்னடைவை சந்திக்க வைத்ணீருந்தனர். குறிப்பாகச் சொல்லப்போனால் கல்முனை,திருக்கோவில் ,அம்பாரை வைத்தியசாலைகள் பல நூறுவருடம் பழைமை வாய்தது இதில் திருக்கோவில் வைத்தியசாலை 201% ஆம் ஆண்டு தரமுயர்த்தப்பட்டாலும் எவ்வித அபிவிருத்தியும் நடைபெறவில்லை இது அரசியல் தலையீடு காரணமாக புறக்கணிக்கப்பட்டு இருக்கின்றது.

அன்று கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிமனையானது நகரப்புற வைத்தியசாலைகளை அபிவிருத்திசெய்வதில் குறியாக இருந்தனர் கிராமப்புற வைத்தியசாலைகள் அங்குள்ள அதிகாரிகளாலும் பிரதேச அரசியல் வாதிகளாலும் புறக்கணிக்கப்பட்ட நிலையே காணப்பட்டது .

நான் மாகாண சபையில் இருந்த போது தமிழ் பிரதேசத்தில் இருந்த கிராமப்புற வைத்தியசாலைகள் தரமுயர்த்தப்படவேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்திருந்த போதும் அது புறக்கணிக்கப்பட்டதாகவே இருந்துவந்தது இந்தப் பிரதேசங்கள் குடியேற்றக்கிராமமாக இருப்பதுடன் 50 வருடத்திற்கு பழைமை வாய்ந்ததாக இருக்கின்றது.

பொத்துவில், கோமாரி வைத்தியசாலையானது ஆரம்ப வைத்தியசாலையாக இருப்பதுடன் அதற்கான வளங்கள் சரியான முறையில் பகிர்ந்தளிக்கப்படவில்லை இந்த வைத்தியசாலைக்கான வளங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டால் அப்பிரதேச மக்கள் தங்களுக்கான வைத்திய சிகிச்சையினை தங்களது பிரதேசத்திலேயே பெறுவார்கள் இதனை சுகாதார அமைச்சு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

அம்பாரை மாவட்டத்தில் பின்தங்கிய பல பிரதேசங்கள் இருக்கின்றன அதாவது செ ாறிக்கல்முனை, மத்தியமுகாம் பிரதேச வைத்தியசாலைகளுக்கான வளங்களை ஏற்படுத்தவேண்டிய தேவை இருக்கின்றது இதனை சுகாதார அமைச்சு ஏற்படுத்தவேண்டு

கல்முனை பிராந்திய சுகாதார பணிமனைக்குட்பட்ட அதாவது கல்முனைக்கும் அக்கரைப்பற்றுக்கும் இடையில் 25 கிலோமீற்றர் தூரத்திற்குள் 5 ஆதார வைத்தியசாலைகள் இருக்கின்றன இவை அனைத்து வளங்களுடன் இயங்கி வருகின்றன இதனைப் பார்க்கின்ற போது நகரங்களில் அனைத்து வளங்களும் குவிக்கப்பட்டு இருப்பதுடன் கிராமப்புறங்கள் புறக்கணித்து இருப்பதனை கடந்தகாலங்களில் அவதானிக்க முடிகின்றது. இது மாற்றப்படவேண்டும் அனைத்து மக்களுக்கும் சுகாதாரச் சேவை சரிசமமாக் கிடைப்பதற்கா ஒழுங்குகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் ஆயூள்வேத வைத்தியசாலைகளைப் பொறுத்தளவில் நாவின் வெளியில் இயங்கி வருகின்ற வைத்தியசாலை 2012 ஆண்டில் இருந்து இயங்கி வருகின்றது அதற்கான கட்டிட வசதிகளைக் கேட்கின்ற போது இதுவரைக்கும் வழங்கப்படவில்லை இந் பிரதேசம் யுத்தகாலத்தில் பாதிக்கப்பட்ட பிரதேசம் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார்.

மத்திய அரசின்கீழ் இயங்கி வருகின்ற வைத்திய சாலைகளுக்கு நிதிபங்கீடுகள் வழங்கப்படுவதுடன் மாகாணசபையின் கீழ் உள்ள வைத்தியசாலைகளுக்கான நிதிப்பங்கீடு சரியாக வழங்கப்படுவதில்லை இது மாறவேண்டும் மாகாண சபையின் கீழ்உள்ள வைத்தியசலைகள் அபிவிருத்திசெய்யப்படும் போதுதான் மாகானசபைக்கான அதிகாரங்கள் பலப்படுத்தப்படும் என தெரிவித்தார்.

## சிக்கல் இருந்தால்

இதற்கமைய, சமையல் எரிவாயு குறித்து ஏதேனும் சிக்கல்கள் இருக்குமாயின் பொது மக்கள் 1311 என்ற இலக்கத்திற்கு அழைத்து அறிவிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வரலாற்றின் முதல்

முதலியாரின் வடிவமைப்பில் உருவாக்கப்பட்ட செங்கோலுடன் வரலாற்றில் முதல் தடவையாக இன்றைய மாநகர அமர்வு மாநகர முதல்வர் தலைமையில் நடைபெற்றுள்ளது.

# மாதகலில் கடற்படை முறுகல் காணி சுவீகரிப்பு முறியடிப்பு

நேற்று செவ்வாய்க்கிழமை நில அளவை திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படவிருந்தது.

இந்நிலையில் நேற்று இரவு 11 மணியளவில் கடற்படையினர், தமது வீட்டுக்கு வருகை தந்து காணியினை வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்து கையொப்பம் வைக்குமாறு கேட்டதாக காணி உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

ஆகவே இன்று, அளவீட்டு பணிகளை தடுத்து நிறுத்துவதற்காக குறித்த இடங்களில் ஒன்றுகூடிய காணி உரிமையாளர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். இதன்போது, கடற்படையினர் கொட்டான்களுடன் குவிக்கப்பட்டு,மக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

காணியினை அளப்பதற்கு எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட்டதை அடுத்து அளவீட்டு நடவடிக்கைகளை தற்காலிகமாக கைவிட்டு, நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் அவ்விடத்தில் இருந்து சென்றுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அரசியல் பிரமுகர்கள் மற்றும் கிராம மக்கள் கடற்படை முகாமிற்கு முன்பு அமர்ந்து இருந்து, தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியதை அடுத்து சம்பவ இடத்திற்கு வருகைதந்த இளவாலை பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் கலந்துரையாடினார்.

குறித்த சம்பவ இடத்திற்கு வருகைதந்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, எதிர்வரும் 2ஆம் திகதி சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் அழைத்து, கலந்துரையாடுவதாக வாக்குறுதி வழங்கியதை அடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து திரும்பிச் சென்றனர்.

# ‘ஒமிக்ரோன்’ தடுப்பூசிக்கு கட்டுப்படுமா என்பது சந்தேகம்

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (30) இடம்பெற்ற சுகாதாரத்துறை அமைச்சு மற்றும் மூன்று இராஜாங்க அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

கொரோனா என்பது உலகளாவிய தொற்று நோய், எத்தனை பிறழ்வுகள் ஏற்பட்டாலும் அதனை உடனடியாக தடுக்க முடியாது. அவ்வாறான நிலையில் ‘ஒமிக்ரோன்’ எனும் புதிய பிறழ்வு தற்போது 15 நாடுகளில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவ்வாறான வைரஸ் ஒன்று கண்டறியப்பட்டுள்ள போதிலும் நோய் தாக்கம், அதன் பரவும் வேகம், மரணங்களின் விளைவுகள் என்பன கண்டறியப்படவில்லை. டெல்டா வைரசே இன்னமும் மோசமான கொவிட் 19 வைரஸாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

‘ஒமிக்ரோன்’ வைரஸ் தொற்றானது ஏற்கனவே கொவிட் வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மீண்டும் ஏற்படுமா அல்லது தடுப்பூசிகளுக்கு இது கட்டுப்படுமா என்பது கூட கண்டறியப்படவில்லை.

ஏற்கனவே கொவிட் வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்கள் கூட மீண்டும் ‘ஒமிக்ரோன்’ வைரஸ் தொற்றுக்கு உள்ளாகலாம் என எதிர்வுகூறப்படுகின்றது. ஆனால் தடுப்பூசி மூலம் கட்டுப்படுமா, தடுப்பூசி வெற்றியா இல்லையா என்பது குறித்து எதிர்வுகூற முடியாத நிலைமையே இப்போது காணப்படுகின்றது.

இதுவரை இந்த வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏனைய வைரஸ் தொற்றை விட மாறுபட்ட தன்மைகளே காணப்படுவதாக கூறப்படுகின்றது.

எனவே தடை செய்யப்பட்ட நாடுகளில் இருந்து இலங்கைக்கு எவரும் வர முடியாது என தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் கடந்த 14 நாட்களுக்கு முன்னர் குறித்த நாடுகளில் இருந்து இலங்கைக்கு வந்துள்ளரனா என்ற விசாரணைகளை அரசாங்கம் முன்னெடுத்துவருகின்றோம்.

எது எவ்வாறு இருந்தாலும் அடிப்படை சுகாதார வழிமுறைகளை தொடர்ந்தும் பின்பற்ற வேண்டும் எனவும் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள வேண்டும் எனவும் உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் நிபுணர்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.

எனவே முன்கூட்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளை நாம் இப்போதே கையாள வேண்டும் என சபையில் வலியுறுத்தினார்.

# சூரன்போர் நடாத்தியமைக்காக ஆலயம் மீது சுகாதார அதிகாரி வழக்கு! தை 13 இல் நீதிமன்றுக்கு வருமாறு நிருவாகத்திற்கு அழைப்புக்கட்டளை!

**(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)**

வரலாற்றுப்பிரசித்திபெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி ஆலயத்தில் இம்முறை முறையான அனுமதியின்றி சூரன்போர் நடாத்தியமைக்கு எதிராக ஆலயநிருவாகம் மீது, திருக்கோவில் பிரதேச சுகாதாரவைத்தியஅதிகாரி வழக்குத்தொடுத்துள்ளார்.

ஆலயவளாகத்தில் முறையான அதிகாரியின் அனுமதியினைப் பெறாமல் சூரன்போர் நிகழ்விற்கு பொதுமக்களை ஒன்றுகூட்டியமை, சமுகஇடைவெளி பேணப்படாமை, முகக்கவசம் அணியாமை ஆகிய குற்றச்சாட்டுக்களை முன்வைத்து இவ்வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.





திருக்கோவில் பிரதேச சுகாதாரவைத்தியஅதிகாரி டாக்டர் பி.மோகனகாந்தன் முறைப்பாட்டாளராக அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றில் இந்த வழக்கைத்தாக்கல் செய்துள்ளார்.

வழக்கை ஏற்றுக்கொண்ட நீதிவான்நீதிமன்றம், இதற்கான நீதிமன்ற வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 13ஆம் திகதி காலை 9மணிக்கு நடைபெறும் என்றும், ஆலயநிருவாகத்தினர் ஆஜராகவேண்டும் என்று நீதிமன்று அழைப்புக்கட்டளை அறிவித்தல் கொடுத்திருக்கிறது.

திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி ஆலயத்தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் உள்ளிட்ட நிருவாசபை உறுப்பினர்களுக்கு இவ்வறிவித்தல், அந்தந்த பிரதேச பொலிஸ் நிலையமூடாக கையளிக்கப்பட்டிருக்கின்றது.

தேசத்துக்கோவில் என்பதால் ஆலயநிருவாகசபை உறுப்பினர்கள் மாவட்டத்தின் பலபாகங்களிலும் இருப்பதும், இவ்வருட வருடாந்த ஆடிஅமாவாசை மஹோற்சவம் கொரோனாகாரணமாக நடாத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இ.த.அ.க வசமிருந்த வெருகல் பிரதேச சபை மோட்டு கட்சியின் வசம் திரும்பும் சாத்தியம்

**(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)**

இலங்கை தழிழரசு கட்சி வசமிருந்த திருகோணமலை வெருகல் பிரதேச சபையின் 2022ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

திங்கட்கிழமை (29) வெருகல் பிரதேச சபையின் 2022ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினரும் சபையின் தவிசாளருமான க.சுந்தரலிங்கம் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டது

இந்நிலையில் சமர்ப்பிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவு திட்டத்திற்கு ஆதரவாக 06 உறுப்பினர்களும் எதிராக % உறுப்பினர்களும் வாக்களித்து மேலதிக ஒரு வாக்கினால் சமர்ப்பிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டது

இதன்போது இலங்கை தமிழரசுக் கட்சி வசம் இருந்த வெருகல் பிரதேசசபை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வசனம் செல்வதத்திற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் அது தொடர்பில் பேச்சுவார்த்தை இடம்பெற்று வருவதாகவும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவருமான கபிலன் அவர்கள் தெரிவித்தார்

மேலும் அவர் ஊடகங்களுக்குகருத்து தெரிவிக்கும்போது திருகோணமலை மாவட்டத்தில் இருக்கின்ற 13 உள்ளுராட்சி மன்றங்களில் ஒன்றான வெருகல் பிரதேசசபை தமிழர்கள் செறிந்து வாழக்கூடிய பிரதேச சபையாக காணப்படுவதுடன் வெருகல் பிரதேசத்தில் ஆட்சி அதிகாரம் இலங்கை தமிழரசு கட்சியின் வசம் இருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் இரண்டாவது வாக்கெடுப்பின் போது தற்போது தோற்கடிக்கப்பட்டு



தமிழரசு கட்சியின் அதிகாரங்கள் திங்கள் முதல் இல்லாமல் போயுள்ளது.

இவ்வாறு இருக்கையில் அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தின் கீழ் வெருகல் பிரதேசத்தில் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம் வெருகல் பிரதேச தமிழ் மக்கள் மீது அன்பும் ஆதரவுமுள்ள அரசியல் தரப்புகள் இச்சூழ்நிலையில் தோற்கடிக்கப்பட்ட பெரும்பான்மையை கருத்தில் கொண்டு முடிவு எடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு வெருகல் பிரதேசசபை தள்ளப்பட்டுள்ளது

2022ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தினை தோற்கடித்த வெருகல் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு நாம் அழைப்பு விடுக்கின்றோம் இந்த சூழ்நிலையில் எம்மோடு இணைந்து கைகோர்த்து பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு முன் வாருங்கள் என்று திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்திக் குழுத் தலைவருமான கபில நுவன் அத்துகோரள அழைப்பு விடுத்துள்ளார்

மேலும் பிரதேச சபை கட்சிகளுக்கு நீங்கள் அழைப்பு விடுக்கிறீர்கள் தற்போது ஆட்சியில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உங்கள் கூட்டு கட்சியில் இருந்து விலகுவதாக கசிந்துள்ள கருத்துக்கு உங்கள் கருத்து என்ன என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பாராளுமன்ற உறுப்பினர் இவ்வாறு பதில் அளித்தார்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி எடுத்துக்கொண்டால் பலக்கூட்டு கட்சிகளுடன் இணைந்து ஒரு கட்சியாகவே காணப்படுகின்றது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி என்பது எங்களுடன் இருக்கின்ற சகோதர காட்சிகளில் அதுவும் ஒன்று இவ்வாறு இருக்கையில் ஒவ்வொருவரும் கூறும் கருத்துகளுக்கு முடிவு எட்டப்படமாட்டாது.

கட்சிகள் என்ற அடிப்படையில் ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு கொள்கைகள் இருக்கின்றது ஒவ்வொரு செயற்பாடுகள் இருக்கின்றது சில சந்தர்ப்பங்களில் சகோதர கட்சிக்குள் சில சில முரண்பாடுகள் ஏற்படலாம் எவ்வாறு ஏற்பட்டாலும் தற்போது ஆட்சியில் இருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எடுத்துக்கொண்டால் பாராளுமன்றத்திலும் சரி பிரதேச சபைகளும் சரி தனியாக ஒரு ஆட்சி பீடத்தை அமைப்பதற்கான சாத்தியக் கூறு இல்லை எனவே சகோதர கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை விட்டு விலகி தனித்து செயற்படுவார்கள் என எண்ணுவது சாத்தியமற்றது என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்பு குழு தலைவருமான கபிலன் அதுகோரல தெரிவித்தார்

மேலும் எந்த வகையிலும் எந்த ஒரு தேர்தலிலும் தனித்துப் போட்டியிடும் ஒரு கட்சியாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இயங்கும் என நாங்கள் நினைக்கவில்லை என இதன்போது தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் இடி மின்னல் தாக்கி வீடு பகுதியளவில் சேதம்
## உயிர்தப்பிய மூன்று பேர்



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பில் வீடு ஒன்றின் மீது இடி மின்னல் தாக்கியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளனர்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆரையம்பதி தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள வீடொன்றிலேயே இடி, மின்னல் தாக்கிய சம்பவம் சனிக்கிழமை நள்ளிரவு 1.00 மணியளவில் ஏற்பட்டுள்ளது. குறித்த வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், வீட்டில்

உறங்கிக்கொண்டிருந்த வீட்டின் உரிமையாளர், அவரது மனைவி மற்றும் மாமா உள்ளிட்ட மூவர் தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளனர்.

குறித்த வீட்டின் பின்னால் உள்ள தென்னை மரத்தை தாக்கிய இடி மின்னல், வீட்டையும் தாக்கியுள்ளது. இதன் போது வீட்டின் கூரை உள்ளிட்ட சுவர்கள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், வீட்டின் மின்னிணைப்புக்கள் முற்றாக

எரிந்துள்ளதோடு, வீட்டினுள் காணப்பட்ட பல இலட்சம் ரூபா பெறுமதியான மின் சாதனப்பொருட்களும் எரிந்து சேதமடைந்துள்ளது.



அக்கரைப்பற்று தேசிய பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் கற்றல் நடவடிக்ககைகளை மேம்படுத்தும் நோக்கில் இப்பாடசாலையில் சேவையாற்றிய ஆசிரியை தன்பீலா யாஸீன் ஒரு தொகை நூல்களை இப்பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்துள்ளார். முதற்கட்டமாக ரூபா பத்தாயிரம் பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்யும் நிகழ்வு கல்லூரி வளாகத்தில் நேற்று(30) இடம்பெற்றது. இதன்போது பாடசாலை ஆளணிச் செயலாளர் ஆசிரியர் எம்.ஐ.எல்.பைஷல் நூல் தொகுதியினை அதிபர் ஏ.பி.முஜீனிடம் கையளிப்பதையும் அருகில் உதவி அதிபர் ஏ.எல்.சுஹைப், எம்.ஏ.நிஸாம் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்: எம்.ஏ.றமீஸ்)

# எமது மக்களுக்கும் சுதந்திரமில்லை ஊடகவியலாளர்களுக்கும் சுதந்திரம் இல்லை

**சாணக்கியன் சாடல்!**

முல்லைத்தீவில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஊடகவியலாளர் ஒருவர் மீது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் குறித்து நீதியானதும், சுயாதீனமானதுமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில், முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் பகுதியில் செய்தி அறிக்கையிடலில் ஈடுபட்ட ஊடகவியலாளர் மீது கடந்த 27ஆம் திகதி இராணுவத்தினர் மிலேச்சத்தனமான முறையில் திட்டமிட்ட வகையில் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முள்ளியவாய்க்கால் கிழக்கில் வசித்து வரும் குறித்த ஊடகவியலாளர் கடந்த 2%ஆம் திகதி செய்தி சேகரிப்பிற்காக முல்லைத்தீவு சென்று அங்கிருந்து வீடு திரும்பிய நிலையில் முள்ளிவாய்க்கால் பகுதியில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் பெயர் பலகையினை ஒளிப்படம் எடுத்த நிலையிலேயே இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்ட நான்கு இராணுவத்தினர் ஊடகவியலாளரை கேள்வி கேட்டு அடையாளப்படுத்த சொல்லி கோரிய வேளை குறித்த ஊடகவியலாளர் அடையாள அட்டையினை எடுத்து காட்ட முற்பட்ட வேளையில் படையினர் ஊடகவியலாளர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதல் நடத்திய படையினர் இராணுவ சீருடையிலும் கடமை அல்லாத நேரத்தில் இராணுவம் அணியும், இராணுவ சீருடையான அரைகாச்சட்டையுடனும் ரிசேட்டுடனும் நின்று தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட இடத்தில் இராணுவம் தாக்குதலுக்காக பயன்படுத்திய பச்சை பனை மட்டை ஒன்றில் முள்ளு கம்பிகள் சுற்றப்பட்ட ஆயுதம் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்தநிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் மூன்று இராணுவத்தினரால் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டதுடன், பிணையிலும் விடுவிக்கப்பட்டுள்ளனர். இது வெரும் கண்துடைப்பு கைதாகவே நாங்கள் பார்க்கின்றோம். இந் தாக்குதல் சம்பவம் குறித்து நீதியானதும், சுயாதீனமானதுமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு நீதி பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். நாட்டில் அண்மைக் காலமாக இடம்பெறும் சம்பவங்களை பார்கின்ற போது, எம்முள் அச்ச உணர்வு ஒன்று தோன்றுவதுடன், நாடு இராணுவ மயமாக்கலினை நோக்கி நகர்கின்றதா என்ற சந்தேகமும் எழுகின்றது. இதனை கூட்டமைப்பு என்ற வகையில் பலமுறை உரக்கச்சொல்லியிருக்கின்றோம்.



இது குறித்து இராணுவத்தளபதி மற்றும் அமைச்சர் சரத் வீரசேகர ஆகியோர் மௌனம் காக்கின்றமை வருத்தமளிக்கின்றது. குறித்த இருவரும் இது தொடர்பாக விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

தற்போதைய அரசாங்கத்தின் கடந்த ஆட்சிக்காலத்தின் போதும் மிக மோசமான ஊடக அடக்குமுறைகள், ஊடகவியலாளர்களைக கடத்திப் படுகொலை செய்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் உள்ளன. இந்தநிலையில் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்பட மாட்டார்கள் என கூறி தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. எனினும் தற்போதைய அரசாங்கத்தில் ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறைகள் மீண்டும் அதிகரித்துள்ளன.

குறிப்பாக பிழைகளை சுட்டிக் காட்டுகின்ற ஊடகவியலாளர்கள் விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டு அச்சுறுத்தப்படுகின்றார்கள். இவ்வாறான செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

எமது மக்களுக்கும் சுகந்திரமில்லை ஊடகவியலாளர்களுக்கும் சுகந்திரம் இல்லை. சுகந்திர ஊடக முடக்கமானது ஒரு நாட்டின் முடக்கத்துக்கு ஒப்பானது. அரச சார்பான தமிழ் அரசியல்வாதிகள் இவ் அரசின் இவ்வாறான செயல்பாடுகளுக்கு ஆதரவு வழங்குவதும் பக்கச் சார்பாக செயல்படுவதும் அவர்களுக்கு சார்பாக செயல்பாடுகளை சரி எனவும் நிறுவிக்கொண்டுள்ளார்கள்.

இந்த அரசின் காலத்திலேயே எம் மக்கள் பல இன்னல்லகளை அதிகளவாக அனுபவித்தனர் அனுபவித்துக்கொண்டும் வருகின்றனர். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கும்பாபிசேகத்திற்கான கோபுரம் அமைக்க அடிக்கல் நடல்!



**( வி.ரி.சகாதேவராஜா)**

வரலாற்றுப்பிரசித்திபெற்ற மடத்தடி மீனாட்சிஅம்மன் புதிய ஆலயத்தின் மகா கும்பாபிசேகத்தடியொட்டிய முகப்புக் கோபரத்திற்கான அடிக்கல் நடும்வைபவம் வெள்ளியன்று நடைபெற்றது.

ஆலயபரிபாலனசபைத்தலைவர் கிருஸ்ணபிள்ளைஜெயசிறில் தலைமையில் இடம்பெற்ற அடிக்கல்நடும் வைபவத்தில் நிருவாகசபை உறுப்ரினர்களும் கலந்துகொண்டார்கள்.

பிரதமகுரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்களின் வழி;காட்டலில் ஆலயபரிபாலனசபைத்தலைவர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் அடிக்கல்நட்டு வைபவத்தடி ஆரம்பித்துவைத்தார்.

மடத்தடி மீனாட்சிஅம்மன் ஆலயத்தின் மகா குடமுழுக்கு வைபவம் அடுத்தவருடம்; 2022 மார்ச் மாதமளவில் நடைபெறும்.அதற்கான பொதுக் கூட்டம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

டிசம்பர் மாதம் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள பொதுக் கூட்டத்திற்கு அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல தமிழ்க்கிராமங்களிலுமுள்ள மீனாட்சிஅம்மன் அடியார்கள் சுதந்திரமாக கலந்துகொள்ள முடியும் எனவும் அன்றையதினம் அவர்களிலிருந்து மகா கும்பாபிசேகக்குழு உள்ளிட்ட பல உபகுழுக்களும் தெரிவு செய்யப்படுமென ஆலயத்தலைவர் கி.ஜெயசிறில் அங்கு தெரிவித்தார்.


Sj
SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch



Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


மாணிக்கப்போடி அறக்கட்டளை
REG.NO : TR/I/71
MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI
முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்


Seela Food
Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.
Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில் நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59







கல்விக்கு கரம் கொடுப்போம் செயற்திட்டத்தின் கீழ் இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் நவம்பர் மாதத்திற்கான நான்காவது பாடசாலைக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் முகமாக இரத்தினபுரி மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பிரதேசமான இத்தகந்த இ/எம்பி/ இலங்காபேரிய தமிழ் வித்தியாலத்திற்கு அண்மையில் வெண்பலகைகள் (WHITE BOARD), பிளாஸ்டிக் கதிரைகள், பாடசாலை கட்டிடத் தொகுதியினை வர்ணம் பூசி அழகுபடுத்தல் போன்ற வேலைத் திட்டங்களை அமைப்பின் செயலாளர் ஆசிரிய ஆலோசகர் எஸ். தயாளன் தலைமையில் நடைபெற்றதைக் காணலாம்.

## கடலரிப்பினால் கல்முனைக்கு பாரிய அச்சுறுத்தல்; சம்மந்தப்பட்ட அரச நிறுவனங்களின் அவசர உதவியைக் கோருகிறது மாநகர சபை



(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனைப் பிரதேசத்திற்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள கடலரிப்பை கட்டுப்படுத்துவதற்கு அவசர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென சம்மந்தப்பட்ட அரச நிறுவனங்களைக் கோரும் தீர்மானமொன்று கல்முனை மாநகர சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் 44ஆவது மாதாந்த பொதுச் சபை அமர்வு திங்கட்கிழமை (29) பிற்பகல் மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்றபோது மாநகர சபை உறுப்பினர் பொன் செல்வநாயகம் இது தொடர்பான பிரேரணையைக் கொண்டு வந்திருந்தார். இதனை மாநகரசபை உறுப்பினர் எம்.குபேரன் வழிமொழிந்தார்.

உறுப்பினர் பொன் செல்வநாயகம் பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றுகையில்;

கடந்த பல வருடங்களாக எமது கல்முனைப் பிரதேசமானது பருவப்பெயர்ச்சி மழை காலங்களில் கடலரிப்புக்குள்ளாகி வந்த போதிலும் சாதாரண காலங்களில் வழமை நிலைக்குத் திரும்பிவிடும். ஆனால் அண்மைக் காலமாக கடல் சீற்றத்தினால் எமது கல்முனைப் பிரதேசம் பாரியளவில் கடலரிப்புக்குள்ளாகி வருகின்றது. குறிப்பாக பாண்டிருப்பு பகுதியில் கடலரிப்பு மிகக் கடுமையாக காணப்படுகின்றது. இதனால் எனது வட்டாரம் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. தென்னந்தோப்புகள் அழிவடைந்துள்ளன. மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது. 80 தூரமளவில் கொங்கிரீட் வீதியும் கடலில் சங்கமமாகியுள்ளது. சில தினங்களுக்கு முன்னர் சிவன் கோவில் மற்றும் விஷ்ணு மடாலயம் போன்றவற்றின் முன்னாலும் கடலரிப்பு ஏற்பட்டிருக்கிறது.

கல்முனைகடற்கரைபள்ளியில் தொடங்கி பெரிய நீலாவணை சேதனப்பசளை உற்பத்தி நிலையம் வரை பல கோடி ரூபா நிதியில் காபட் வீதியாக புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்ற கடற்கரை வீதியையும் கடல் விழுங்கும் அபாயம் காணப்படுகிறது. இந்த நிலையை நீடிக்க விட்டால் எமது சொத்துக்கள் கடலால் காவு கொள்ளப்பட்டு, பாரிய அழிவுகள் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. கடற்கரை பிரதேசம் என்பது விலைமதிக்க இயற்கை முடியாத வளமாகும். அந்த இயற்கை வளங்களை அடுத்த சந்ததிக்கு பாதுகாத்துக் கொடுக்க வேண்டிய கடப்பாட்டை நாம் கொண்டிருக்கிறோம்.

ஆகையினால், எமது மாநகர சபையானது இது விடயத்தில் விசேட திட்டங்களை வகுத்து, கரையோரம் பேனல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் சூழல் பாதுகாப்பு அதிகார சபை உள்ளிட்ட அரச நிறுவனங்களின் உதவியுடன் அவற்றை செயற்படுத்தி, இக்கடலரிப்பை கட்டுப்படுத்துவதற்கு அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இது விடயத்தில் மக்களினதும் வளங்களினதும் பாதுகாப்பைக் கவனத்தில் கொண்டு எமது மாநகர சபையானது இது விடயத்தில் அதிக கரிசனை செலுத்தி, சம்மந்தப்பட்ட அரச நிறுவனங்களுடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு, தேவையான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுப்பதற்கு வலியுறுத்தப்படும் எனத் தெரிவித்த மாநகர முதல்வர், இத்தீர்மானத்தை சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்குமாறு சபைச் செயலாளரை அறிவுறுத்தினார்.

இந்த சபை அமர்வில், உறுப்பினர் ஏ.ஆர்.அமீர் சமர்ப்பித்த முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.ஐ.எம்.முஹைதீனுக்கான அனுதாபப் பிரேரணையும் நிறைவேற்றப்பட்டதுடன் கிண்ணியா, குறிஞ்சாங்கேணி இழுவைப்படகு விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

## சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் கந்தளாய் லக்போகர நிறுவனத்திற்கு 63 மெட்ரிக் தோன் சேதனை பசளை கையளிப்பு



(எப்.முபாரக்)

திருகோணமலை கந்தளாய் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் கந்தளாய் லக் பொகர நிறுவனத்துக்கு 63 மெட்ரிக் தொன் பதப்படுத்தப்பட்ட சேதனை பசளை நேற்று (30) கையளிக்கப்பட்டது.

கந்தளாய் பிரதேசத்திலுள்ள விவசாயிகளுக்கு வழங்கவென இவ் பசளை கையளிக்கப்பட்டுள்ளது.

ஏற்னவே நாற்பதாயிரம் கிலோ கிராம் சேதன பசளை வகைகள் வகைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாகவும் லக்பொகர நிறுவனத்தின் கந்தளாய் கிளை முகாமையாளர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சிவில் பாதுகாப்பு கிழக்கு மாகாண தளபதி கேணல் உபாலி ரத்நாயக்க தம்மிக்க ரத்நாயக்க மற்றும் லக்பொகர நிறுவனத்தின் கிழக்கு மாகாண முகாமையாளர், மற்றும் விவசாய அதிகாரிகள், சிவில் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டார்கள்.

## குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் முன்னிலையில் புதிய உறுப்பினர் சத்தியப்பிரமாணம்



குச்சவெளி பிரதேச சபைக்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியிலிருந்து இக்பால் நகர் வட்டாரத்திற்கு புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர் திரு.பொன்னையா வைத்தியலிங்கம் அவர்கள் நேற்று (30) குச்சவெளி பிரதேச சபையின் 44 வது மாதாந்த சபை அமர்வில் தவிசாளர் ஏ.முபாறக் அவர்களின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதை காணலாம்.

## இலங்கை வந்துள்ள ஆன்மீகத் தலைவர் அஷ்செய்க் அல்லாமா டாக்டர் தைக்கா அஹமத் நாஸிர் அவர்களுக்கு கல்முனையில் மகத்தான வரவேற்பு




(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

இலங்கை அரசாங்கத்தின் விசேட விருந்தினராக வருகை தந்திருகின்ற அருஸிய்யத்துல் காதிரிய்யாவின் சர்வதேச ஆண்மீக அமைப்பின் தலைவர், டாக்டர் அஹ்மத் நாஸிர் அவர்களை வரவேற்கும் நிகழ்வு (29) கல்முனை மாநகரத்தில் மிகவும் கோலாகலமாக இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் டாக்டர் எஸ்.எம்.ஏ.அஸீஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஆன்மீக தலைவருடன் வருகைதந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ச அவர்களின் முஸ்லிம் சமய பண்பாடு மற்றும் கலாசார விவகாரங்களுக்கு பொறுப்பான இணைப்பாளர் கலாநிதி ஹஸன் மௌலானா (ஹாதிரிய்யி ) அவர்களுக்கும் இங்கு பெரும் வரவேற்பு வழங்கப்பட்டது.

கல்முனைக்குடி கடற்கரைப் பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை தர்கா சரீப் பள்ளிவாசலுக்கு வருகை தந்த ஆன்மீகத் தலைவர் விசேட பிரார்த்தனையில் ஈடுபட்டார்.

பின்னர் கல்முனை பிரதான நகர் வழியாக ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட ஆன்மீகத் தலைவர், முஹைதீன் பெரிய ஜும்ஆ பள்ளிவாசலுக்கு விஜயம் செய்தார் இங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மஜ்லிஸிலும் கலந்து கொண்டார்.

ஆன்மீகத் தலைவர் மற்றும் அவருடன் வருகைதந்த அதிகாரிகளுக்கு வரவேற்பு வழங்கப்பட்டதுடன் இலங்கை நாட்டுக்கு விசேட விருந்தினராக வருகை தந்திருக்கும் ஆன்மீக தலைவருக்கு கல்முனை முஹைதீன் ஜும்மா பெரிய பள்ளிவாசல் கல்முனைக்குடி கடற்கரைப் பள்ளி நாகூர் ஆண்டகை தர்கா பள்ளிவாசல் ஆகியவற்றின் சார்பாக நினைவுச்சின்னம் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். இதில் உலமாக்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், புத்திஜீவிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## அரிதான நாகலிங்க மரம் மடத்தடியில் நட்டுவைப்பு!

(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

உலகில் அரிதாக காணப்படுகின்ற நாகலிங்க மரத்தின் கன்று வரலாற்றுப்பிரசித்திபெற்ற மடத்தடி மீனாட்சிஅம்மன் ஆலயத்தில் வெள்ளியன்று நட்டுவைக்கப்பட்டது.

ஆலயபரிபாலனசபைத்தலைவர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் இடம்பெற்ற மரம்நடும் வைபவத்தில் நிருவாகசபை உறுப்ரினர்களும் கலந்துகொண்டார்கள்.

பிரதமகுரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்களின் வழிகாட்டலில்,ஆலயபரிபாலனசபைத் தலைவர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் இவ் அரிதாக மரத்தை நட்டுவைத்தார்.

நாகலிங்கமரத்தின் மகிமை பற்றி ஆலயபரிபாலனசபைத்தலைவர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் அங்கு தெரிவிக்கையில்: நாகலிங்கம் தென்னமெரிக்காவின் வடபகுதி, வெப்பவலய அமெரிக்கா தென் கரிபியன் பகுதிகளைத் தாயகமாகக் கொண்டது. இது 3035 மீட்ட உயரம் வரை வளரக்கூடியது.இலங்கையின் சில பகுதிகளிலும் நாகலிங்க மரங்கள் காணப்படுகின்றன. சிங்கள மொழியில் இது சல் (வீலீழ) என அழைக்கப்படுகிறது. இம்



மரத்தின் பழம் முற்றி பழுக்க 1 வருடம் முதல் 18 மாதம் வரை கூட ஆகலாம்.

இம்மரத்தின் இலை மற்றும் பழங்களிலுள்ள டைஹைட்ரோ டையாக்சின்டோலோ குயினா சோலோன் டிரிப்டான்ரின் இன்டிகோ இன்டுருபின் ஐசாடின் ஆகியன எதிர் உயிரியாக செயல்பட்டு தோல் உடலின் மென்மையான பகுதிகளில் வளரும் பூஞ்சை பாக்டீரியா கிருமிகளை அழிக்கின்றன. இதன் பட்டை மலேரியா சுரத்தை நீக்க பயன்படுத்தப்படுகிறது. இதன் உலர்ந்த பழங்கள் கீழே விழுந்து தரையில் பட்டு வெடித்து பெரும் சத்தத்தை ஏற்படுத்தும். ஆகவே கோயில்களில் கொள்ளையர்கள் புகாமல் இருக்க பாதுகாப்பின் அடையாளமாக நாகலிங்க மரங்கள் கோயில்களில் வளர்க்கப்படுகின்றன.

இதன் இலைகளை மையாக அரைத்து பூஞ்சை கிருமியால் தோன்றும் சொறி, சிரங்கு, படர் தாமரை, படை உள்ள இடங்களில் தடவ குணமுண்டாகும். இதன் பூவின் லிங்கம் போன்ற பகுதியை அரைத்து புண்களின் மேல் தடவ புண்கள் ஆறும். இதன் இலைகள் நுண்கிருமிகளை அழிக்கும் ஆற்றல் கொண்டதால் இவற்றை மென்று சாப்பிட பல் மற்றும் ஈறு இடைவெளியில் தங்கியுள்ள கிருமிகளை வெளியேற்றி பல்வலியை குறைக்கின்றன. பற்கள் சொத்தையாகாமல் தடுக்கின்றன.என்றார்.

மடத்தடி மீனாட்சிஅம்மன் ஆலயத்தின் மகா குடமுழுக்கு வைபவம் அடுத்தவருடம்; 2022 மார்ச் மாதமளவில் நடைபெறும்.அதற்கான பொதுக் கூட்டம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் உயிரிழந்த உறவுகள் மற்றும் காயமடைந்தவர்ளுக்கு குச்சவெளி பிரதேச சபையின் 44 வது சபை அமர்வில் பிரார்த்தனை



(எப்.முபாரக்)

இம் மாதம் 23.11.2021 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாட்டை பெரிதும் சோகத்தில் ஆழ்த்திய கிண்ணியா குறிஞ்சாங்கேணி படகு விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களுக்கு நேற்று (30) குச்சவெளி பிரதேச சபையின் 44 வது மாதாந்த சபை அமர்வில் பிரதேச சபையின் தவிசாளர் .ஏ.முபாறக் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது உறுப்பினர்கள் மற்றும் செயலாளர், உத்தியோகத்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு பிரார்த்தனை இடம்பெற்றது.

அத்துடன் குறித்த அனர்த்தத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் உறவுகள் மிக விரைவில் பூரண சுகம் பெற்று வீடு திரும்ப வேண்டும் எனவும் இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் குறித்த பாதிப்பிலிருந்து மீண்டெழ இறைவன் துணைபுரிய வேண்டும் எனவும் பிரார்த்திக்கப்பட்டது.


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
STRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich
Poststrasse-5, 3400 Burgdorf
Tel: 0041 43 243 60 66 | 0041 79 940 15 10
ஆயுள்வேத மூலிகை வைத்தியம் மூலம் (கேரளா)
சிகிச்சை அளிக்கப்படும். பழைய நோவாக இருந்தாலும்
நாங்கள் பூரண குணமடைய வைக்கின்றோம்.
சுவிஸ் நாட்டில் உள்ளவர்கள் மருத்துவ காப்புறுதி மூலம்
பணத்தைச் செலுத்தலாம். (Karankenkasse Anerkannt)
மேலதிகத் தொடர்புக்கு
Tel: 0041 43 243 60 66 | Whatsapp: 0041 79 940 15 10 (24 x 7)
www.aaranayurveda.ch


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


Restaurant
GRÜNAU
Meier-Wiesen Str. 58
8004 Zürich
Montag - Sonntag
08:00 - 22:00
PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL.
BBQ GRILL, BIRIYANI SPL., CURRY GERICHTE,
PARTYSERVICE.
Bestellung Nummer
044 260 2222
079 563 2222
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
Uber Eats
TWINT

# பெரிய நீலாவணை விசேட அதிரடிப்படை முகாம் அமைந்துள்ள காணி விடுவிக்கப்பட வேண்டும்

## கல்முனை மாநகர சபையில் தீர்மானம்

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

பெரிய நீலாவணையில் கல்முனை மாநகர சபைக்கு சொந்தமான இடத்தில் இயங்கி வருகின்ற விசேட அதிரடிப்படை முகாம் அங்கிருந்து அகற்றப்பட்டு, அக்காணி மாநகர சபையிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென கல்முனை மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் 44ஆவது மாதாந்த பொதுச் சபை அமர்வு திங்கட்கிழமை (29) பிற்பகல் மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்றபோதே இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இது தொடர்பான பிரேரணையை முதல்வர் ஏ.எம்.றகீப் முன்மொழிந்து உரையாற்றுகையில்;

கல்முனை மட்டக்களப்பு பிரதான வீதியில் துறைநீலாவணைக்கு செல்கின்ற பெரிய நீலாவணை சந்தியின் கிழக்கு புறமாக விசேட அதிரடிப் படை முகாம் இயங்கி வருகின்ற இடமானது மருதமுனை, பாண்டிருப்பு மற்றும் பெரிய நீலாவணை பிரதேசங்களை உள்ளடக்கிய முன்னைய கரைவாகு (கல்முனை) வடக்கு கிராம சபைக் காரியாலயம் இயங்கி வந்த இடமாகும். 198%ஆம் ஆண்டளவில் கல்முனை பட்டின சபையுடன் கரைவாகு வடக்கு கிராம சபையும் இணைக்கப்பட்டே கல்முனை பிர



தேச சபை உருவாக்கப்பட்டது. பின்னர் கல்முனை பிரதேச சபையானது நகர சபையாகவும் மாநகர சபையாகவும் தரமுயர்த்தப்பட்டு இன்றளவில் இயங்கி வருகிறது.

இதன்படி குறித்த இடமானது கல்முனை மாநகர சபைக்குரிய சொத்து என்பதனால், அந்த இடத்தை மாநகர சபையின் தேவைக்கு பயன்படுத்தும் நோக்குடன் மீட்க வேண்டியிருக்கிறது. ஆகையினால் அந்த இடத்தில் இயங்கி வருகின்ற விசேட அதிரடிப் படை முகாம் அங்கிருந்து அகற்றப்பட்டு, அதனை வேறொரு இடத்தில் அமைத்துக் கொள்ளுமாறும் எமது மாநகர சபைக்கு உரித்தான அந்தக் காணியை எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

பிரேரணையை வழிமொழிந்து உரையாற்றிய மாநகர சபை உறுப்பினர் எம்.குபேரன் தெரிவிக்கையில்;

பெரிய நீலாவணையில் விசேட அதிரடிப்படை முகாம் இயங்கி வருகின்ற இடத்திலேயே கரைவாகு வடக்கு கிராம சபைக் காரியாலயம் இயங்கி வந்ததை நாம் அறிவோம். அக்காரியாலயக் கட்டிடம் இப்போதும் இப்படை முகாம் பகுதிக்குள் இருக்கிறது. 1991ஆம் ஆண்டு காலப்பகுதியில் யுத்த சூழ்நிலையின் போது படையினர் இந்த இடத்தை ஆக்கிரமித்து நிலைகொண்டுள்ளனர். இந்த இடம் எமது மாநகர சபைக்கு சொந்தமானது என்பதால் படை முகாமை அங்கிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றார் .

மாநகர சபை உறுப்பினர்களான எம்.எஸ்.எம்.உமர் அலி, ஹென்றி மகேந்திரன் ஆகியோரும் கல்முனை மாநகர சபையின் சொத்தாக இருக்கின்ற குறித்த நிலத்தை மீட்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என கேட்டுக் கொண்டனர். இதனைத் தொடர்ந்து குறித்த பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அதேவேளை பெரிய நீலாவணையில் கல்முனை மாநகர சபைக்கு சொந்தமான மற்றொரு இடத்தில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையத்தை வேறொரு இடத்திற்கு மாற்றுவது தொடர்பிலும் இதன் போது கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

# மன்னார் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக பெய்த அடை மழை மற்றும் வெள்ளத்தினால் ஏற்பட்ட பயிர் அழிவு

நாட்டில் நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக மன்னார் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக பெய்த அடை மழையினால் 2021/22 பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள சுமார் 17ஆயிரத்து 167 ஏக்கர் வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளதாக மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் அ.மரின்குமார் தெரிவித்துள்ளார்.



பலத்த மழை மற்றும் வெள்ளத்தினால் ஏற்பட்ட பயிர் அழிவு தொடர்பில் உதவி ஆணையாளர் மேலும் தெரிவிக்கையில்;

மன்னார் மாவட்டத்தில் 2021/22 காலபோக நெற்செய்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. மாவட்டத்தின் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட 13 கமநல சேவைகள் நிலையங்களின் கீழும் இதுவரை சுமார் 33 ஆயிரத்து 994 ஏக்கர் வயல் நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் சுமார் 20 ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்கள் விதைப்புக்காக தயார்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக பெய்த அடை மழை மற்றும் வெள்ளம் காரணமாக சுமார் 17 ஆயிரத்து 167 ஏக்கர் வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன. இதில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 5 ஆயிரத்து 555 ஏக்கர், முசலி பிரதேச செயலாளர் பிரிவில் 2 ஆயிரத்து 400 ஏக்கர், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 4 ஆயிரத்து 345 ஏக்கர், மடு பிரதேச செயலாளர் பிரிவில் 825 ஏக்கர், மன்னார் நகரம் பிரதேச செயலாளர் பிரிவில் 4 ஆயிரத்து 42 ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

இதைத் தவிர செய்கை பண்ணப்பட்டுள்ள மரக்கறிகள் மற்றும் ஏனைய உணவுப் பயிர்களுக்கும் மழை மற்றும் வெள்ளத்தினால் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் எமது கமக்காரர்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

வெள்ள நீர் தற்போது வழிந்தோடி வருகின்றது. எனினும் பயிர் அழிவு தொடர்பில் எமது உத்தியோகத்தர்களால் தகவல் திரட்டப்படுவதுடன் பயிர் சேத மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கும் தெரியப்படுத்தியுள்ளோம். - என்றார்.




# இன நல்லுறவிற்கான சந்தை திறப்பு

**(க.ருத்திரன்)**

'பொருளாதாரம் நல்லாட்சியில் பெண்கள் மற்றும் இளைஞர்களின் பங்கேற்பு' என்ற தொணிப்பொருளில் இன நல்லுறவிற்கான சந்தை நேற்று மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் கோறளைப்பற்று பிரதேச செயலாளர் கோ.தனபாலசுந்தரம் அவர்களினால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.





பிரதேசத்தில் இளைஞர்கள், பெண்கள், தொழில் முயற்சியாளர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் முகமாக அவர்களினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்தும் முகமாக இவ் விற்பனை சந்தை நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

தமிழ், முஸ்லிம் பயணாளிகள் 48 பேருக்காக தலா 85000 ரூபா பெறுமதியான உள்ளீட்டு உபகரணப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. ஆத்துடன் 11 குழுக்களுக்கான 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உள்ளீடுகளை வழங்கி இவர்களின் தொழில் முயற்சி மேப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இன்று 15 வகையான உள்ளூர் உற்பத்தி பொருட்க்கள் சந்தைப் படுத்தப்பட்டன. இதில் தைத்த ஆடைகள், உணவுப் பொருட்கள், மறக்கறி வகைகள், தாணியப் பொருட்;கள், தேன் என பல்வேறு வகையான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டது. இதற்கான நிதி அனுசரனையை மட்டக்களப்பு அரசசார்பற்ற பெரேண்டினா அபிவிருத்தி சேவை நிறுவனம் வழங்கியுள்ளது.

மேற்படி நிகழ்வில் வாழைச்சேனை பிரதேச செயலக திட்ட முகாமையாளர் எஸ்.கங்காதரன், பெரேண்டினா நிறுவன திட்ட முகாமையாளர் எஸ்.சிவராஜா, திட்ட இணைப்பாளர்களான வி.மிதுனன், எம்.சரேஸ் சமூக வலுவூட்டளார்கள் மற்றும் பயணாளிகள் கலந்து கொண்டனர்.

# உ கிலோ கிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

**(ந.குகதர்சன்)**

2 கிலோ கேரள கஞ்சாவுடன் காத்தான்குடியைச் சேர்ந்த 40 வயதுடைய நபரொருவர் வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஓட்டமாவடி பசாரில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.



குறித்த நபர் யாழ்ப்பாணத்திலிருந்து பிறைந்துரைச்சேனைக்கு வியாபார நோக்கில் கேரளா கஞ்சாவினை கடத்தி வந்த நிலையில் வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவிற்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைவாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய போதையொழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவருடமிருந்து 2 கிலோ அளவிலான கேரள கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன், நீதிமன்ற உத்தாவின் பேரில் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு, இவருடன் தொடர்புடைய நபர்கள் தொடர்பில் வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், கேரள கஞ்சாவினை வரவழைத்த பிறைந்துறைச்சேனை பகுதியைச்சேர்ந்த சூத்திரதாரியை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப்பிரிவினர் தேடி வருகின்றனர்.

# மத்தியஸ்த சபையின் புதிய உறுப்பினர்களை நியமிப்பதற்கான நேர்முக பரீட்சை





**(ந.குகதர்சன்)**

நீதி அமைச்சின் கீழ் இயங்கும் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவினால் பிரதேச செயலகம் தோரும் மத்தியஸ்த சபையின் புதிய உறுப்பினர்களை நியமிப்பதற்கான நேர்முக பரீட்சைகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பதிநான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் மத்தியஸ்த சபையின் பதவி வறிதாகுகின்ற உறுப்பினர்களுக்கு பதிலாக மீண்டும் உறுப்பினர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம் பெற்றது.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜா தலைமையில் இடம்பெற்ற நேர்முக பரீட்சையில் மத்தியஸ்த சபை ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் எம்.ஐ.ஆஸாத் மற்றும் நீதி அமைச்சின் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முப்பத்தைந்து பேர் இந் நேர்முகப் பரீட்சையில் கலந்து கொண்டதாக பிரதேச செயலாளர் வீ. தவராஜா தெரிவித்தார்.

# மாணவச் செல்வங்களை தீர்மானிக்கும் சக்தியாக உருவாக்க வேண்டும்

## பிரதேச சபை உறுப்பினர் இராமநாதன்

(சாவகச்சேரி நிருபர்)



மாணவச்செல்வங்களைதீர்மானிக்கும் சக்தியாக உருவாக்க வேண்டும் என கரவெட்டிப் பிரதேசசபை உறுப்பினரும்,பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜனின் பிரத்தியேக செயலாளருமாகிய ச.இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழ் மாவட்ட பாடசாலைகளில் இடம்பெற்ற மைதான அபிவிருத்திக்கான அடிக்கல் நாட்டு வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

மாணவர்களதும், பெற்றோர்களதும் கனவினை நனவாக்கும் அளப்பரிய சேவையை ஆசிரிய உத்தியோகத்தர்கள் ஆற்றி வருகின்றனர்.

சில பாடசாலைகள் உரிய பௌதீக வசதி வாய்ப்புக்கள் இன்றிக் காணப்படுவதாக எமக்கு சுட்டிக்காட்டப்படுகிறது.தற்போது இரண்டு வருட காலமாக கொரோனா நிலைமை காரணமாக நாட்டில் வருமானங்கள் அற்ற நிலையில் பல சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது.

நாடு வழமைக்கு திரும்பும் போது அவ்வாறான குறைபாடுடைய பாடசாலைகளின் வளப் பற்றாக்குறைகள் படிப்படியாக நீக்கப்பட்டு மாணவர்கள் சந்தோசமான ஓர் மனநிலையில் கற்கக்கூடிய நிலை ஏற்படுத்தப்படும்.மாணவச் செல்வங்களை நல்ல நிலைக்கு கொண்டு வந்து சொந்தக் காலில் தீர்மானிக்கும் சக்தியாக அவர்களை உருவாக்க வேண்டும் என்பதே அனைவரதும் விருப்பு. என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# பாடசாலை உபகரணங்கள் கையளிப்பு

(பைஷல் இஸ்மாயில்)

நிந்தவூர் பிரதேசசபையின் உதவித்த விசாளர் வை.எல்.சுலைமாலெவ்வையின் முயற்சியின் கீழ், நிந்தவூர் அல்-மினா பாடசாலைக்குத் தேவையான பாடசாலை உபகரணங்கள் நேற்றைய தினம் (29) கையளிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் எம்.எச். ராபிஹூ, விடுத்த வேண்டுகோளிற்கு அமைவாக, உதவித்தவிசாளரினால் குறித்த உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதில் பாடசாலை அலுவலகத்திற்குத் தேவையான தளபாட வகைகள், ஒலிபெருக்கி சாதனங்கள் மற்றும் பிரிண்டர் உள்ளிட்ட பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கல்முனை வலயக்கல்விப்பணிப்பாளர் எஸ். புவனேந்திரன்,



கல்முனை கல்வி வலய ஆரம்பப்பிரிவு உதவிக்கல்விப்பணிப்பாளர் ஏ.எம். ரஸீன் உள்ளிட்ட பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் புதிய போலிஸ் உபநிலையம்

(வி.சுகிர்தகுமார் )









அம்பாறை மாவட்டம் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் புதிய பொலிஸ் உபநிலையம் இன்று திறந்து வைக்கப்பட்டது.

கோளாவில் நாவற்காடு பிரதேசத்தில் அமைந்துள்ள பொலிஸ் நிலைய திறப்பு விழாவில் கிழக்கு மாகாண சிரேஸ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் எல்.கே.டபிள்யூ.கமல் சில்வா பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிலையத்தை திறந்து வைத்தார்.

குறித்த பொலிஸ் நிலையம் அமைவதற்கான பொருத்தமான இடத்தினை தெரிவு செய்து தருமாறு பொலிஸ் தரப்பினரால் பிரதேச செயலாளரிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் பொதுமக்கள் நன்மை கருதி குறித்த இடத்தை வழங்கி இருந்தார்.

இந்நிலையில் அமைக்கப்பட்ட பொலிஸ் நிலையத்தின் திறப்பு விழாவில் கலந்து கொண்ட கிழக்கு மாகாண சிரேஸ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் புதிய பொலிஸ் நிலைய பெயர் பலகையை திரை நீக்கம் செய்து வைத்ததுடன் நாடாவை வெட்டியும் திறந்து வைத்தார்.

இதன் பின்னராக புதிய பொலிஸ் நிலையத்தின் குறிப்பேட்டில் கையொப்பத்தை பதிவு செய்த அவர் இடம்பெற்ற கூட்டத்திலும் கலந்து கொண்டார்.

இதன்போது அங்கு உரையாற்றிய கிழக்கு மாகாண பொலிஸ் மா அதிபர் குறித்த பொலிஸ் நிலையம் அமைவதற்கு முழுப்பங்களிப்பையும் வழங்கிய பிரதேச செயலாளருக்கு நன்றி தெரிவித்தார். மேலும் உபநிலையமாக திறக்கப்பட்டுள்ள குறித்த பொலிஸ் நிலையத்தின் அமைவிடம் மற்றும் பொது மக்கள் தேவை கருதி மிக விரைவாக நிரந்த பொலிஸ் நிலையமாக மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். இதன் பின்னர் இடம்பெற்ற மரநடுகை நிகழ்விலும் கலந்து கொண்டு மரக்கன்றை நாட்டி வைத்தார்.

நிகழ்வில்; அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் மா அதிபர் எஸ்.எம்.வை.செனவரட்ண, அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டீ.ஜே.ரத்னாயக்க அக்கரைப்பற்று பொலிஸ் நிலை பொறுப்பதிகாரி பண்டார விஜயதுங்க நிலையப்பொறுப்பதிகாரி ஜெயசீலன் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள்,ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன், பிரதேச செயலக உத்தியோகத்தர் சமய பெரியார்கள் என பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவின் கீழ் இருந்த ஆலையடிவேம்பு பிரதேசத்துக்கு தனி பொலிஸ் நிலயம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை மாவட்டத்தின் பெரியநீலாவணை பிரதேசத்தில் புதிய போலிஸ் நிலையம் திறந்து வைப்பு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியநீலாவணை பிரதேசத்தில் புதிய பொலிஸ் நிலையம் ஒன்று இன்று (29.11.2021) திறந்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அவர்களின் சுபீட்சத்தின் நோக்கு தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் 20வது புதிய பொலிஸ் நிலையமாக இந்த பொலிஸ் நிலையம் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கல்முனை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி கே.எச். சுஜித் பிரியந்த தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அம்பாரை மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் எஸ்.எம்.வை. செனவிரத்ன (ஈஐஎ) பிரதம அதிதியாக கலந்து கொண்டு பொலிஸ் நிலையத்தை திறந்து வைத்தார்.

கிழக்குமாகாண விசேட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி எல்.கே.டப்ளியு. கமல் சில்வா அவர்களின் வழிகாட்டலுக்கு அமைய நடைபெற்ற இந்த பொலிஸ் நிலைய திறப்பு விழாவில், அம்பாறை மாவட்டத்திற்கு பொறுப்பானசிரேஷ;ட பொலிஸ் அத்தியட்சகர்ஆர்.எம்.டி.ஜெயந்த ரத்நாயக்க, கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே அதிசயராஜ், கல்முனைஉதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டி. எச்.டி.எம். எல்.வுத்திக உட்பட மத்திய முகாம், சவளக்கடை, சாய்ந்தமருது, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், பெரியநீலாவணை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி, கடற்படையினர்;, ராணுவ அதிகாரிகள், சர்வ மதத்தலைவர்கள், அரச அதிகாரிகள், சிவில் சமூகத்தினர் என பலர் இதில் கலந்து கொண்டனர்.

நிகழ்வின்போது பெரியநீலாவணை பொலிஸ் நிலையத்திற்கு இரண்டு பொலிஸ் முச்சக்கர வண்டிகளுக்குரிய ஆவணங்களை புதிய பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி ஆர்.ஜெ. சுஸார திலங்க ஜெயலாலிடம் பிரதம அதிதயால் வழங்கிவைக்கப்பட்டன.

நிகழ்வின்போது பிரதம அதிதி அவர்களினால் பெரியநீலாவணை பொலிஸ் நிலையத்திற்கு இரண்டு பொலிஸ் முச்சக்கர வண்டிகளுக்குரிய ஆவணங்களை புதிய பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி அமைக ஆர்.ஜெ. சுஸார திலங்க ஜெயலாலிடம் கையளிக்கப்பட்டது.

# அறநெறிப் பாடசாலை புனர்நிர்மாணம் செய்யப்பட்டு மக்களிடம் கையளிப்பு

(பாறுக் ஷிஹான்)



திருமகள் அறநெறிப் பாடசாலை புனர்நிர்மாணம் செய்யப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த கையளிக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (28) மாலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் துஷானந் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், மற்றும் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் அதிசயராஜ் ஆகியோர் கலந்து கொண்டு குறித்த பாடசாலை கட்டடத்தை திறந்து வைத்தனர்.

குறித்த பாடசாலை கட்டடமானது கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பாண்டிருப்பு கிராமத்தில் அமைந்திருப்பதுடன் இவ் அறநெறிப் பாடசாலையானது அவுஸ்திரேலியா வாழ் தமிழர்களுடைய பூரண நிதிப் பங்களிப்பில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு பாண்டிருப்பு காந்திஜீ விளையாட்டு கழகத்தினரிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



இந்நிகழ்வில் கட்சியின் உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் பங்குபற்றியிருந்தனர்.

# திருமலை, நகரசபை வரவு செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றம்

(வடமலை ராஜ்குமார்)

திருகோணமலை நகராட்சி மன்றத்தின் 2022ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் இன்று 29ம் திகதி சபை உறுப்பினர்களின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றபட்டது

இன்று 29ம் காலை திருகோணமலை நகராட்சி மன்றத்தின் தலைவர் நா.இராஜநாயகம் தலைமையில் கூடியது.இதன் போது 314 923 000 முன்னூற்றி பதினான்கு மில்லியன் ஒன்பது இலட்சத்து இருபத்து மூவாயிரம் மொத்த பெறுகையும் 314 922 %00 முன்னூற்றி பதினான்கு மில்லியன் ஒன்பது இலட்சத்து இருபத்திரண்டு ஆயிரத்து எழுநூறு ரூபாய் மொத்த செலவீனமுமாக இவ் வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது.

சபையின் மொத்த உறுப்பினர்கள்



24 பேரில் 23 உறுப்பினர் இன்றைய அமர்விலே கலந்து கொண்டிருந்தனர். ஒருவர் சபைக்கு சமூகமளிக்கவில்லை இதனடிப்படையில் இவ் வரவு செலவுத் திட்டம் 23 பேரின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றபட்டது.

# மண்முனை வடக்கு மக்களுக்கான விதைப்போதிகளை வழங்கி வைத்தார்

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு தேசிய கொள்கை திட்டமிடலுக்கு அமைய விதை பொதிகள் வழங்கும் நிகழ்வு மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் டேபோ மண்டபத்தில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன் தலைமையில் இன்று 2021.11.29 திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது.

பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதாரப் பயிர்ச் செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் அவர்களின் வழிகாட்டலில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உழுந்து மற்றும் பயறு பயிர்ச் செய்கைத் திட்டத்தின் கீழ் குறித்த விதை பொதிகள் இன்று வழங்கிவைக்கப்பட்டது.









குறித்த நிகழ்வின்போது மண்முனை வடக்கு பிரதேசசெயலக பிரிவிற்குட்பட்ட 15 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை சேர்ந்த 5% பயனாளர்களுக்கு இஞ்சி பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதுடன், இவர்களுக்கான பயறு மற்றும் உழுந்து விதை பொதிகள் ஏற்கனவே வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் கலந்துகொண்டதுடன் குறித்த நிகழ்வில் மண்முனை வடக்கு பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சுதர்சன் உள்ளிட்ட அமைச்சரின் இணைப்பாளர்கள் மற்றும் பயனாளிகள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இன்றைய தினம் %98,000 ரூபாய் பெறுமதியான 1330 டுஞ் இஞ்சி விதைகள் இராஜாங்க அமைச்சரினால் வழங்கிவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# நிந்தவூரில் போலிஸ் நிலையம் திறந்து வைப்பு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பிரதேசத்தில் புதிய பொலிஸ் நிலையம் திங்கள்வைபவ ரீதியாக திறந்து வைக்கப் பட்டுள்ளது

நிந்தவூரில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட பொலீஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் டி .எம். எஸ். கே.திஸாநாயக்கா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி கமல் சில்வா பிரதம அதிதியாக கலந்து கொண்டு புதிய பொலிஸ் நிலையத்தை வைபவ ரீதியாக திறந்து வைத்தார்.






இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எஸ். எம். வை. செனவிரத்ன, அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர். எம். டி .ஜெயந்த ரத்னாயக்க, கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக, நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி எம் .அப்துல் லத்தீப், சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் கே.டி.எஸ்.ஜெயலத் உட்பட சர்வமத தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்

# பேசாலை புனித வெற்றி அன்னை ஆலய பெருவிழாவை முன்னிட்டு கொடியேற்றம்





( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மறைமாவட்டத்தின் முதுமையான பேசாலை பங்கின் பாதுகாவளியாம் புனித வெற்றி அன்னை ஆலய வருடாந்த பெருவிழா எதிர்வரும் 08.12.2021 நடைபெறுவதையிட்டு திங்கள் கிழமை கொடியேற்ற வைபவம் இடம் பெற்றது.

மன்னாரில் பெய்துவரும் மழையினால் பேசாலை பகுதியானது எங்கும் வெள்ளக்காடுகளாக காட்சி அளித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இவ் ஆலய வளாகமும் வெள்ள நீரால் சூழ்ந்திருக்கும் நிலையிலேயே இவ் கொடியேற்றம் இடம்பெற்றது.

பேசாலை பங்கு தந்தை அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் புனித வெற்றி அன்னை மற்றும் பாப்பரசர் திருக்கொடிகளையும் ஏற்றிவைத்து இவ் பெருவிழாவுக்கான நவநாட்களை தொடக்கி வைத்தார்.

வழமையாக இவ் விழாவில் பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்கின்றபோதும் சுகாதார நடைமுறைகளை கவனத்தில் கொண்டும் மற்றும் வீதிகள் வீடுகளில் பெரும் வெள்ளம் இப்பகுதியில் காணப்படுவதால் பக்தர்கள் வெகு குறைவாகவே காணப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# மனித ஆட்கடத்தல் மனித வியாபாரம் தொடர்பிலான குற்றங்கள் பற்றிய செயலமர்வு

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

மனித ஆட்கடத்தல் மனித வியாபாரம் தொடர்பிலான குற்றங்கள் பற்றிய செயலமர்வொன்று தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் நேற்று இடம் பெற்ற இச் செயமர்வில் புலம் பெயர்தல் ஊடான சட்ட ரீதியற்ற முறையில் வெளிநாடுகளுக்கு கடல் மூலமாக செல்வதனால் ஏற்படும் பாதக விளைவுகள் பற்றியும் தெளிவுபடுத்தப்பட்டது. வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு இதற்கான அனுசரனையை வழங்கியுள்ளது சட்ட விரோதமான முறையில் கடல் வழி மூலமாக வெளிநாடுகளுக்கு செல்வதனால் இலங்கை நாட்டு சட்டத்தினால் வழங்கப்படும் தண்டனை தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டது. இதில் வெளிநாட்டு வேலை வாய்ப்பை எதிர்பார்க்கும் பெண்கள், இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டதோடு வளவாளராக சேருவில பிரதேச செயலக வெளிநாட்டு வேலை வாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.அருணா கலந்து கொண்டு பயிற்சியை முன்னெடுத்துச் சென்றார்.



குறித்த நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான அஸ்பீர், டில்சாத் உள்ளிட்டோர்களும் கலந்து கொண்டனர்.



# பாரதி நினைவு நூற்றாண்டு விழாக் கருத்தரங்கு

(படுவான் பாலகன்)





கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறையின் ஏற்பாட்டில் பாரதி நினைவு நூற்றாண்டு விழாக் கருத்தரங்கு கடந்த 22.11.2021 ஆம் திகதி திங்கட்கிழமை கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைக் கூடத்தில் நடைபெற்றது.

மொழித்துறையின் தலைவர் கலாநிதி சி. சந்திரசேகரம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஊ.இ.றாகல், கலை கலாசார பீட பீடாதிபதி கலாநிதி ஜீ.கென்னடி ஆகியோர் கலந்து கொண்டனர்.

மூன்று அமர்வுகளாக நடாத்தப்பட்ட இக்கருத்தரங்கு நிகழ்விலே 15 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் நேரடியாகவும் இணையவழியாகவும் இக்கருத்தரங்கில் ஆய்வுரைகளை நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.



இதன்போது, பாரதியின் தேசியப் பாடல்கள் (பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரன்) பாரதியின் பத்திரிகைத் தலையங்கங்கள் (பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா), பாரதியின் எழுத்து மொழிபெயர்பு வுசயளெடயவழைளெ ழக டீயசயவாடீள றுசவைiபெள (திரு. ஈஸ்வரநாதப்பிள்ளை குமரன்), பாரதியும் மரபும் (பேராசிரியர் சின்னையா மௌனகுரு), பாரதியார் கட்டுரைகள் (கலாநிதி சி. சந்திரசேகரம்), பாரதியின் ஸ்வசரிதை (பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு), பாரதியும் வால்ட் விற்மனும் (வாழ்நாட் பேராசிரியர் அ. சண்முகதாஸ்), பாரதியும் பாரதிதாசனும் (திருமதி றூபி வலன்ரீனா பிரான்சிஸ்) , ஈழத்துக் கவிஞர்களும் பாரதியும் (பேராசிரியர் செல்லையா யோகராசா, பாரதியின் கவித்திறன் (பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா), பாரதியின் பக்திப்பாடல்களும் தத்துவப் பாடல்களும் (கலாநிதி சயனொளிபவன் முகுந்தன்) , பெண்ணியல் நோக்கில் பாரதியின் எழுத்துக்கள் (கலாநிதி நதிரா மரியசந்தனம்), பாரதியின் கருத்துப் படங்கள் (பேராசிரியை அம்மன்கிளி முருகதாஸ்), பாரதியின் தொழிலாளர் பற்றிய பாடல்கள் திருமதி விஜிதா திவாகரன்), பாரதியின் வசன கவிதைகள் (திரு. கோபாலப்பிள்ளை குகன்), பாரதியின் நெடுங்கவிதைகள் -குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் (கலாநிதி கனகசபை இரகுபரன்) ஆகிய கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

இவ்வாய்வுகள் தொகுக்கப்பட்டு நூல்வடிவில் வெளிவர உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலையில் இரு மாணவர்கள் கராத்தே போட்டியில் சர்வதேச சாதனை



(எச்.எம்.எம்.பர்ஸான்)

வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலையில் கல்வி கற்கும் இரு மாணவர்கள் சர்வதேச கராத்தே போட்டியில் சாதனை படைத்துள்ளதாக பாடசாலை அதிபர் ஏ.எம்.எம்.தாஹிர் தெரிவித்தார்.

உலக கராத்தே சம்மேளனம் நடாத்திய ஈ காட்டா சாம்பியன்ஷிப் சுற்றில் குறித்த இரண்டு மாணவர்களும் சர்வதேச ரீதியாக இரண்டாம் இடங்களைப் பெற்று நாட்டுக்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்துத் தந்துள்ளனர்.

இவ்வாறு சாதனைகளைப் நிலைநாட்டியுள்ள எம்.பி.அல்தாப் பஸீர் மற்றும் எம்.ஐ.எம்.இம்றியாஸ் ஆகிய இரு மாணவர்களுக்கும் மாணவர்களை தயார்படுத்திய உடற்கல்வி ஆசிரியர் ஆர்.அலோஜிதன் மற்றும் ஒத்துழைப்புகளை வழங்கிய பெற்றோர்கள், கராத்தே பயிற்றுவிப்பாளர்கள் அனைவருக்கும் பாடசாலை அதிபர் ஏ.எம்.எம்.தாஹிர் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்தார்.

# ஹெரோயின் போதைப் பொருளுடன் மூவர் கைது



(பாறுக் ஷிஹான்)

ஹெரோயின் போதைப்பொருளைதம்வசம் வைத்திருந்த சந்தேகத்தின் அடிப்படையில் பெண் உட்பட மூவர் சம்மாந்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நிந்தவூர் தியோட்டர் வீதிக்கு அருகில் வைத்து பெண் உட்பட மூவர் 80 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் திங்கட்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதான மூவரும் நிந்தவூர் பகுதியை சேர்ந்தவர்கள் என்பதுடன் சுமார் 51,27,18 வயதுள்ள சந்தேக நபர்களாவர்.

அரச புலனாய்வுப் பிரிவினரின் தகவலுக்கமைய சம்மாந்துறை பொலிஸார் குறித்த மூவரையும் கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கைதாகிய சந்தேக நபர்கள் மற்றும் சான்று பொருட்கள் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது.

மேலும் இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றதுடன் கைது செய்யப்பட்ட நபர்களை

சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

# கரைவலை தோணிகளுக்கு அம்பாறை மாவட்டத்தில் அதிகளவான கீரி மீன்கள் பிடிபடுகின்றன

பாறுக் ஷிஹான்

திடீர் காலநிலை மாற்றம் காரணமாக கல்முனை பிராந்திய கடற்கரைகளில் கரைவலை தோணிகளுக்கு அதிகளவான கீரி மீன்கள் பிடிபடுகின்றன.

நேற்று மருதமுனை ,கல்முனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காரைதீவு, நிந்தவூர் ,அட்டாளைச்சேனை, பாலமுனை, அக்கரைப்பற்று, உள்ளிட்ட கடற்பரப்பில் கரைவலை தோணிகளுக்கு நீண்ட நாட்களின் பின்னர் அதிகளவான கீரி மீன்கள் பிடிக்கப்பட்டன. குறித்த கீரி மீன்கள் உள்ளூர் சந்தையில் ஒரு கிலோ 250 முதல் 300 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.



இதே வேளை அதிகளாவான மீன்கள் பிடிக்கப்பட்டதாக தகவல் பரவியதையடுத்து பொது மக்கள் மீன்களை பார்வையிடுவத்றகாக கடற்கரை பகுதியை நோக்கி வருகை தந்ததை காண முடிந்தது .அண்மைக்காலமாக கல்முனை பிராந்திய கரை வலை தோணிகளுக்கு அதிகமான மீன்கள் பிடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இங்கு பிடிக்கப்படும் மீன்களின் பெறுமதி சுமார் மூன்று இலட்சம் ரூபா முதல் வெளியிடங்களுக்கும் உள்ளூர் சந்தைகளுக்கும் விநியோகம் செய்யப்படுகின்றது. இதேவேளை தற்போது கல்முனை கடற்கரையில் கரை வலை மற்றும் ஆழ்கடல் மீன்பிடி என்பன தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

மீனவர்கள் பிடித்த மீன்களை சுகாதார சட்ட விதிமுறைகளை பின்பற்றி விற்பனை செய்து வருகின்றனர்.கடந்த கொரோனா காரணமாக பொதுமுடக்கம் அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட போதிலும் எவ்வித சிரமமும் இன்றி கடற்தொழில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு சேதனத் தோட்டம் அமைக்க உபகரணங்கள் வழங்கிவைப்பு



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கிழக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் கீழ் அலுவலகங்களில் சேதனத் தோட்டம் அமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு தேவையான உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இதன்போது, சம்மாந்துறை வலய உதவி விவசாய பணிப்பாளர் ஏ.எல்.எம்.சல்மான், வலய விவசாய போதனாசிரியர் எஸ்.எல்.எம்.ரசீம்( உயர்பீடம் ) ,வலய பாடவிதான உத்தியோகத்தர் பிஆ.குணநிதராசா பெரியநீலாவணை விவசாய விரிவாக்கல் நிலைய தொழில்நுட்ப உதவியாளர் பி .கருணா ஆகியோரால் விளக்கவுரைகள் வழங்கப்பட்டன. இதனையடுத்து உபகரணங்கள் வைத்தியர் டொக்டர்.ஜெ.மதனிடம் கையழிக்கப்பட்டன.

# தொழில் வழிகாட்டல் வாரத்தினை முன்னிட்டு தேசிய மற்றும் மாவட்ட ரீதியில் நடைபெற்ற போட்டி நிகழ்வுகளில் வெற்றி பெற்ற மாணவர்களை கௌரவித்து பரிசில்கள் வழங்கும் நிகழ்வு!!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)



தொழில் வழிகாட்டல் வாரத்தினை முன்னிட்டு தேசிய ரீதியில் நடைபெற்ற போட்டி நிகழ்வுகளில்

வெற்றி பெற்ற மாணவர்களை கௌரவித்து பரிசில்கள் வழங்கும் நிகழ்வு இன்று மட்டக்களப்பில் இடம்பெற்றது.

நாட்டின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு, தற்போதைய அரசாங்கத்தின், அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தேசிய கொள்ளை பிரகடனமாகிய சுபீட்சத்தின் நோக்கு ''கொள்கைத் திட்டத்தில் தொழிற்




படையின் ஆற்றல்கள், திறன்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவுமிக்க மனிதவளத்தை வலுவூட்டுகின்ற அடிப்படையில் உலகளாவிய மட்டத்திலான தொழிற்படையை இலங்கையில் உருவாக்கும் நோக்கில் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் கீழ், மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்களம் தேசிய தொழில் வழிகாட்டல் வாரம் நிகழ்வு கடந்த ஒக்டோபர் 04 ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 10 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

நாடளாவிய ரீதியாக நடைபெற்ற இந் நிகழ்ச்சி திட்டம் எமது மட்டக்களப்பு மாவட்டத்திலும் ஞிணிதிடிஞீ 19 நிலைமைகளையும் கருத்தில் கொண்டு, நிகழ்நிலை மூலமாக நடைபெற்றிருந்தன.

''நாட்டிற்கு சுமை இல்லாத உழைக்கும் தலைமுறை'' எனும் தொனிப்பொருளில் ''தொழில் வழிகாட்டலை சமூகமயமாக்குதல்'' எனும் நோக்கினை அடிப்படையாக கொண்டு இத் தொழில் வழிகாட்டல் வாரம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இத் தேசிய தொழில் வழிகாட்டல் வாரத்தினை முன்னிட்டு நடாத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கவிதை, கட்டுரை, பேச்சு, சித்திரம் மற்றும் வினாவிடை போட்டி இத்தோடு 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான கட்டுரை போட்டி என்பன நடைபெற்றிருந்தன.

இப்போட்டிகளில் பங்குபற்றி தேசிய மட்டத்தில் வெற்றிபெற்று மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த சாதனையாளர்களையும், மாவட்ட மட்டத்தில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப்பெற்றவர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வானது

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று 30.11.2021 திகதி நடைபெற்றது.

இதன்போது கட்டுரை, பேச்சு, சித்திரம், வினாவிடை போட்டி மற்றும் 18 வயதிற்கு மேற்பட்ட இளைஞர்கள், பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கட்டுரைப் போட்டி என்பவற்றில் பங்குபற்றி தேசிய ரீதியில் வெற்றிபெற்ற 3 மாணவர்களும், மாவட்ட மட்டத்தில் வெற்றிபெற்ற மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் அடங்கலாக 15 பேரும் இதன்போது மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளிட்ட அதிதிகளினால் பாராட்டி பணப் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக இடம்பெற்ற இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சினி ஸ்ரீகாந்த், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன்,

மாவட்ட செயலக உயரதிகாரிகள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் அதிகாரிகள், பாடசாலைகளின் அதிபர்கள், மாணவர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர் உள்ளிட்ட குறிப்பிட்டளவிலானோர் இதன் போது கலந்துகொண்டிருந்தனர்.

## ரஹ்மத் மன்சூரின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது மைதானத்திற்கு மின்னொளி



(அஸ்லம் எஸ்.மௌலானா)

சாய்ந்தமருது பொலிவேரியன் ஐக்கிய பொது விளையாட்டு மைதானத்திற்கு ரஹ்மத் பவுண்டேசனின் ஸ்தாபகத் தலைவரும் கல்முனை மாநகரசபை பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூரின் ஏற்பாட்டில் கோப்ரா எல்.ஈ.டி. மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இவ்வேலைத் திட்டம் நேற்று முன்தினம் (29) முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இம்மைதானத்தில் பாவனையில் இருந்த மின்விளக்குகள் பழுதடைந்து, இருள் சூழ்ந்து காணப்பட்டிருந்த நிலையில் சாய்ந்தமருது கிரிக்கட் சங்கத்தின் கோரிக்கையின் பேரில் அவர் குறுகிய காலத்தில் இம்மைதானத்திற்கு மின்னொளியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

தமது கோரிக்கையை துரிதமாக நிறைவேற்றித்தந்த பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர் மற்றும் அதற்கான முயற்சிகளை முன்னெடுத்த ரஹ்மத் பவுண்டேசன் சம்சுல் முனா ஆகியோருக்கு சாய்ந்தமருது கிரிக்கட் சங்கத்தின் நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளது.

## திருக்கோவில் பிரதேசத்தில் 150 மாவர்களுக்கு கல்வி சிப்தோர புலமைப் பரிசில் காசோலைகள் வழங்கி வைப்பு





(எஸ்.கார்த்திகேசு)

திருக்கோவில் பிரதேசத்தில் 150 மாவர்களுக்கு கல்வி சிப்தொர புலமைப் பரிசில் காசோலைகள் வழங்கி வைப்பு

அம்பாரை திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் சமூர்த்திப் குடும்பங்களைச் சேர்ந்த 150 மாணவ மாணவிகளுக்கு கல்வி மேம்பாட்டுக்கான அரசின் கல்வி சிப்தொர புலமைப் பரிசில் காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலக சமூர்த்தித் தலைமை முகாமையாளர் பி.பரமானந்தம்; தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்று இருந்தன.

இதன்போது அரசினால் வழங்கப்படும் சமூர்த்தி குடும்பங்களைச் சேர்ந்த உயர்தர மாணவர்கள் தங்கள் உயர்தர கல்வியை சிறப்பாக முன்னெடுக்கும் நோக்குடன் இவ் கல்வி சிப்தொர புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் இவ் காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் திருக்கோவில் பிரதேசத்தில் சுமார் 150 மாணவ மாணவிகளுக்கு சுமார் 23 இலட்சம் ரூபா காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதுடன் மாணவர் ஒருவருக்கு தலா 15ஆயிரம் என முதலாம் வருடத்திற்கான காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.அனோஜா கணக்காளர் ஏ.அரசரெத்தினம் தம்பிலுவில் விநாயகபுரம் சமூர்த்தி வங்கி முகாமையாளர்கள் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மாணவ மாணவிகள் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.

# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அத்தியட்சகருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை முன்வைப்பு



(பாறுக் ஷிஹான்)

வைத்தியர்கர்கள் அதிகாரிகள் ஊழியர்கள் சிலரை தம்வசப்படுத்தி அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை நிர்வாகத்தினை குழப்பும் முன்னாள் வைத்திய அத்தியட்சகர் தொடர்பில் தீர்வுகள் கிடைக்காத பட்சத்தில் தொழிற்சங்க போராட்டம் ஒன்றினை தொடர்ச்சியாக முன்னெடுக்கவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மட்டக்களப்பு கல்முனை பிராந்திய உறுப்பினர் வைத்தியர் ஏ.எம் சுஹைல் தெரிவித்தார்.

அரச வைத்திய சங்கத்தின் அக்கரைப்பற்று கிளை ஏற்பாட்டில் திங்கட்கிழமை(29) மாலை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் ஊடக சந்திப்பொன்றை மேற்கொண்டு இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது

நாங்கள் இந்த செய்தியாளர் மாநாட்டை நடத்தும் நோக்கம் கடந்த நான்கு மாதங்களாக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் ஏற்பட்டிருக்கின்ற நிர்வாக சீர்கேட்டு தளம்பல் நிலை ஆகும்.எனவே இந்த நிர்வாக சீர்கேட்டு தளம்பல் நிலைமைக்கு முன்னாள் வைத்திய அத்தியட்சகரே பொறுப்பாளியாவார்.இந்த விடயத்தை கருதிக்கொண்டு ஒரு தீர்வு எமக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் ஒரு தொழிற்சங்க போராட்டத்தை நடாத்த முடிவு செய்தோம் .ஆனால் கடந்த காலத்தில் சுகாதார அமைச்சும் பொலிசாரும் தந்த எமக்கு உறுதிமொழியை அடுத்து இந்த தொழிற்சங்க நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்திருந்தோம்.

ஆனால் இன்று இவ் வைத்தியசாலையில் பல நிர்வாக ரீதியான முறைகேடுகளும் நிர்வாக ரீதியான பிரச்சினைகளை முகம் கொடுத்துள்ளன. இவ்வைத்தியசாலையில் கடமையாற்றும் எங்களது சங்க அங்கத்தவர்கள் பல சந்தர்ப்பங்களில் எங்களுக்கு முறைப்பாடுகளை செய்திருந்தனர்.அதன் பிற்பாடு நாங்கள் இவ்வருடம் கடந்த மே மாதம் ஜூன் மாதமளவில் அந்த காலத்தில் தற்காலிக வைத்திய அத்தியட்சகர் கடமை புரிந்த ஐ.எம். ஜவாஹிர் என்பவரிடம் பேசுவதற்காக முயற்சி மேற்கொண்டிருந்தோம்.எனினும் அவர் எம்மை புறக்கணித்ததுடன் எமது பிரச்சினைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. கடந்த காலத்தில் இவர் விடாப்பிடியாக இருந்ததன் காரணமாக வைத்தியர்களாகிய நாங்கள் ஒன்றிணைந்து தொழிற்சங்க போராட்டம் ஒன்றுக்கு செல்வதற்காக நிர்ப்பந்திக்கப்பட்டு இருந்தோம்.

எமது இந்த வேலைநிறுத்த தொழிற்சங்க போராட்டத்தை அடுத்து சுகாதார அமைச்சு உடனடியாக அவரை உடனடியாக அவரை கிண்ணியா ஆதார வைத்தியசாலைக்கு வைத்தியராக கடமையை ஏற்குமாறு சுகாதார அமைச்சு அறிவித்திருந்தது.இருப்பினும் அவர் அங்கு தனது கடமையை பொறுப்பேற்காமல் நான்கு வாரகாலம் சுகயீன விடுமுறையின் பின்னரே கிண்ணியா தள வைத்தியசாலையில் கடமை பொறுப்பேற்றிருந்தார். இருப்பினும் அவர் அங்கு சென்ற பிற்பாடு தான் முன்பு கடமையாற்றிய அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சில ஊழியர்களையும் அங்கு கடமைபுரியும் உத்தியோகத்தர்கள் சிலரையும் தன் வசப்படுத்தி வைத்தியசாலையில் நிர்வாகத்துக்கு குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டு வருகிறார்.

எனவே தான் வைத்திய அதிகாரிகள் சங்கமாகிய நாங்கள் ஒன்றிணைந்து அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அவரின் தூண்டுதலினால் இடம்பெறுகின்ற நிர்வாக சீர்கேடுகளை சீர் செய்யுமாறு சுகாதார அமைச்சுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலும் தொழிற்சங்க போராட்டம் ஒன்றை நடத்துவதற்கும் இந்த ஊடக சந்திப்பில் தீர்மானித்துள்ளோம்.

எனினும் தற்போது சுகாதார அமைச்சும் பொலிசாரும் குறித்த வைத்தியரின் விடயம் தொடர்பில் உடனடியாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் கடமை புரியும் ஒரு சில ஊழியர்கள் அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து அவர்களை இடமாற்றம் செய்வதற்கும் தீர்மானித்திருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் எதிர்வரும் வாரமளவில் சுகாதார அமைச்சு அதிகாரிகளை அனுப்பி குறித்த வைத்தியசாலையில் நிலவும் சுகாதார சீர்கேடுகளை விசாரணை செய்ய உள்ளதாகவும் சுகாதார அமைச்சு எமக்கு அறிவித்துள்ளனர்.இதற்கமைய எமது போராட்டத்தை பிற்போடுவதுடன் அவ்வாறு இதற்கான தீர்வுகள் கிடைக்காத பட்சத்தில் குறித்த வைத்தியரின் செயற்பாட்டை கண்டித்து தொழிற்சங்க போராட்டம் தொடர்ச்சியாக ஆரம்பிக்கப்படும் என்பதை நாங்கள் தெரிவித்துக்கொள்கின்றோம்.அத்துடன் இங்கு கடமை புரியும் வைத்தியர்களை அடக்கு முறைகளை கையாளும் முகமாக கடந்த காலங்களில் முன்னாள் வைத்திய அத்தியட்சகர் செயல்பட்டிருக்கிறார் அதற்கான ஆதாரங்களும் உண்டு என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த ஊடக சந்திப்பில் அரசாங்க வைத்திய சங்கத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளர் வைத்தியர் லியனகே நிரோஷன் உள்ளிட்ட அங்கத்தவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்த யூலை மாதம் அளவில் வைத்திய அத்தியட்சகர் ஜவாஹிருக்கு எதிராக சில குற்றச்சாட்டுகளை குறிப்பிட்டுஇ சுகாதார அமைச்சின் செயலாளருக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் கடிதத் தலைப்பில் வைத்திய அத்தியட்சகர் ஜவாஹிருக்கு எதிரான மேற்படி கடிதங்கள் சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# மன்னாரில் டெங்கு அபாயம் எச்சரிக்கையாக இருக்கவும்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன்



( வாஸ் கூஞ்ஞ)

மன்னாரில் டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டு வருவதனாலும் தற்பொழுது வெள்ள நீர் காணப்படுவதாலும் மன்னார் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் நுளம்பு தங்களை தீண்டா வண்ணம் தங்களை காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ரி.வினோதன் விடுத்திருக்கும் செய்தியில் நவம்பர் மாதம் (11.2021) இதுவரை மன்னாரில் 8 பேர் டெங்கு நோயுடன் இனங்காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் மேலும் பலர் சமூகத்தில் டெங்கு தொற்றுக்கு உள்ளாகி மென் குணங்குறிகளுடன் குணமடைந்தும் இருக்கலாம் என கருதப்படுகின்றது.

இந்த டெங்கு நோயாளர்களாக காணப்பட்டவர்கள் பேசாலை 8 ஆம் வட்டாரம், பனங்கட்டிக்கொட்டு, எமில்நகர் மற்றும் சின்னக்கடை ஆகிய பகுதிகளிலேயே இவ் நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர் எனவும்

மன்னார் பகுதியில் தற்பொழுது உள்ள சூழ்நிலையில் நுளம்பு பெருகும் நிலை காணப்படுவதால் முடிந்தளவு மக்கள் நுளம்பு பெருகும் இடங்களை இல்லாதொழிப்பதுடன் நுளம்புக் கடியிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளும் வழிமுறைகளைக் கையாளுமாறும் மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

அத்துடன் பாடசாலை சமூகத்தினர் பாடசாலை சுற்றாடலை நுளம்பு பெருக்காத வண்ணம் தூய்மையாக வைத்திருப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும் எனவும் வேண்டப்பட்டுள்ளனர் என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 05

# இலக்கியத் துறையின் மூத்த எழுத்தாளர் கலாபூஷணம்
# கேணிப்பித்தன் சண்முகம் அருளானந்தம்
# கலைஞரின் சாதனைப் பயணம்

இலக்கியங்கள் மக்கள் வாழ்க்கையைச் சித்தரிப்பனவாகவும், சமுதாய மேம்பாட்டிற்கு வழிவகுப்பனவாகவும் உள்ளன. அவ் வகையில், பாரம்பரிய அழகிய பண்பாட்டுச் சிறப்புக்கள் பல நிறைந்த தொன்மைமிகு கிராமமான ஆலங்கேணியைப் பிறப்பிடமாகவும் உவர்மலையினை வசிப்பிடமாகக் கொண்டவரும், இலக்கியத்துறையில் தனது 14ஆவது வயதிலிருந்து இற்றைக்கு 50 வருடங்களாக இன்று வரை அதீத ஆர்வத்துடன் ஈடுபட்டு கேணிப்பித்தன் என்ற புனைபெயரில் எழுதுபவர் கேணிப்பித்தன் சண்முகம் அருளானந்தம் ஆவார். சிறுவர் இலக்கியம், சிறுவர் பாடல்கள், சிறுவர் கதைகள், சிறுவர் கட்டுரைகள், நாவல், சிறுகதை, கவிதை, ஆய்வு நூல்கள் என்றவாறு பல்வேறுபட்ட துறைகளில் 100ற்கும் மேற்பட்ட நூல்களை தன் எழுத்துத் திறமையால் படைத்து நம் திருகோணமலை மண்ணுக்கு பெருமைசேர்த்த புகழுக்குரிய கலைஞர் ஆவார். ஆசிரியராக, அதிபராக, கல்விப் பணிப்பாளராக அரசாங்க பணி புரிந்து ஓய்வு பெற்றவர்;. 1990ஆம் ஆண்டு கௌரவ ஆளுநர் விருது, 2005இல் கலாபூஷணம் விருது பெற்றவர்;. இவரது 15 நூல்கள் மாகாணப் பரிசு பெற்றவையும், 6 நூல்கள் தொடர்ச்சியாக சாஹித்திய மண்டல விருது பெற்றவையுமாகும். இவ்வாறாக நம் மண்ணுக்கு தனது எழுத்துத் திறமையால் பெருமை சேர்த்த முன்னோடியாகவும், மூத்த கலைஞராகவும் திகழும் கேணிப்பித்தன் சண்முகம் அருளானந்தம் அவர்களின்; சாதனைக் கலைப் பயணத்தின் தொகுப்பினை இங்கு காணலாம்.


இவரை இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் அமரர் எஸ்.டி. சிவநாயகம் ஆவார். இவர் பாடசாலையில் கல்வி கற்கும் போது இவரது ஆசிரியர்கள் இலக்கியத்தினை ஆங்கிலத்திலும், தமிழிலும் கற்பிக்கும்போது இவர் அப்படியே ஆழ்ந்து விடுவார். ஒவ்வொரு பொருளையும் உற்று நோக்கி இரசிப்பார். இவர் உயிரியல் விஞ்ஞானம் கற்றுக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அப்போது தாவரவியல் கற்பித்த ஆசிரியர் பி.எஸ்.சாக்கோ கற்பிக்கும்போது மலர்களையும், பூச்சி, புழுக்களையும் மற்றும் விலங்குகள் பற்றியும் அற்புதமாகக் கற்பிப்பார். அவற்றின் வாழ்க்கை வட்டங்களை இவர் பிறந்து வளர்ந்த ஆலங்கேணி கிராமத்தின் இயற்கை அழகையும், மக்களின் வாழ்வியலையும் ஒப்பிட்டு பார்த்தார், கூர்ந்து கவனித்தார், தேடலினைத் தேடினார், இலக்கியத்துறை மீதான ஆர்வம் யாவற்யையும் மொத்தமாக இலக்கியமாக்கி தனது கூர்மையான அறிவாலும், வினைத்திறன் மிக்க முயற்சியாலும் ஆழமான முற்போக்கு இலக்கிய சிந்தனையுடன் எழுத்து எனும் ஊடகத்தைக் கொண்டு எழுதத் தொடங்கினார்.

இவர் ஆசிரியராக இருந்தபோது மாணவர்களைக் கவரப் பல வழிகளைக் கையாண்டார். கவிதை, கதை. கட்டுரை, நாடகம் என எழுதிக்காட்டி அவர்களை ஊக்குவிப்பார். இவர் சேனையூர் மகாவித்தியாலயத்தில் கற்பித்துக் கொண்டிருக்கும் சமையத்தில் உப்பாறு, கங்கை, மூதூர், கட்டைபறிச்சான் ஆகிய துறைகளைத் தாண்டி பாடசாலைக்கு முதலாளாக வந்து நிற்பார். ஒவ்வொரு துறையைக் கடக்கும் போதும் தோணி வரும் வரை காணும் காட்சிகளைக் கவிதைகளாக வடித்து பிள்ளைகளுக்கு வாசித்துக் காட்டுவார். அதன் பின்னர் ஒவ்வொரு மாணவர்களையும் எழுதத் தூண்டுவார். மாதத்தில் இரண்டு தடவை மாணவர் மன்றங்களை நடாத்தி அனைத்து மாணவர்ளைகளையும் ஏதாவது நிகழ்ச்சியில் பங்குபெறச் செய்வார். அவருடன் கற்பித்த ஆசிரியர்களும், அதிபரும் இவரின் பாடசாலைக் கால இலக்கியத்துறை வேலைப்பாடுகளுக்கு வேண்டியளவு உதவினார்கள். மற்றும் சிறப்பாக இவரது உற்ற நண்பர் கலாபூஷணம் செ.விபுணசேகரம் இவரின் இலக்கியத்துறைப் பயணத்தில் மிகவும் உதவினார்;. இவரது மாணவர்களினால்;தான் இவரது இலக்கியப் பயணம் தொடர ஆரம்பித்தது. தினபதி, சிந்தாமணி ஆசிரியர் அமரர் எஸ்.டி. சிவநாயகம் இவரது ஆக்கங்களுக்கு நல்ல வரவேற்புக் கொடுத்துப் பிரசுரித்தார். இவ் ஆசிரியரே இவருக்குப் கேணிப்பித்தன் என்ற புனைபெயரையும் அளித்தார்.

**இவர் இதுவரையில் வெளியிட்ட நூல்களாவன:-**
- சிறுவர் பாடல்கள் -20
- சிறுவர் கதைகள் -16
- சிறுவர் கட்டுரைகள் -10
- சிறுவர் நாவல்கள் -11
- வாழ்க்கை வரலாறு -03
- சிறுகதை தொகுதிகள் -06
- இளைஞர் நாவல்கள் -09
- நாவல்கள் -06
- கவிதைத் தொகுதி -02
- கல்வியியல் நூல்கள் -04
- ஆங்கில கதை, கட்டுரை -10
- ஆய்வு நூல்கள் -07
- ஆனந்தஅனுபவம் அனுபவக் கதைகள் -01

**ஆகியனவாகும்.**

இவரது எழுத்துக்கள் வீரகேசரி, தினகரன், சிந்தாமணி, தினக்குரல், தினபதி, ஆகிய நாளேடுகளிலும், சுதந்திரன் ஞானம், செங்கதிர் ஆகிய சஞ்சிகைகள் உட்பட இன்னும் பல வாராந்த, மாதாந்த ஏடுகளிலும் பிரசுரமாகியுள்ளன. இவர் வடக்கு கிழக்கு மாகாணம், கிழக்கு மாகாணம் என்பன வழங்கிய மாகாண மட்ட இலக்கிய நூல் பரிசுகளைப் பல தடவைகள் பெற்றுள்ளார். நாடாளவிய ரீதியில் நடைபெற்ற பல சிறுகதைப் போட்டிகளில் பரிசில்களையும், குறிப்பாக முதற் பரிசையும் அதிகமாக பெற்றுள்ளமை குறிப்பிடக்கூடிய



சிறப்பம்சமாகும்.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்திருக்கும் போது இவர் பிரதி மாகாணக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும்; சந்தர்ப்பத்தில் நூல்களை எழுதினாலும் அவற்றைப் போட்டிக்கு அனுப்புவதில்லை. பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் தான் போட்டிகளுக்கு நூல்களை அனுப்பியிருந்தார். வடக்கு கிழக்கு இணைந்திருந்தபோது சுமார் 0% நூல்களுக்கு மேல் விருதுகள் கிடைத்தன. கிழக்கு மாகாணம்



பிரிந்தபின் 08 நூல்களுக்கு மேல் விருதுகள் கிடைத்தன. மற்றும் யாழ் இலக்கிய வட்டம் இலக்கிய விருதுகள் 02 கிடைத்துள்ளன. கல்வி அமைச்சு கொழும்பு - தேசிய நூலக அபிவிருத்திச் சபை இலக்கிய கையெழுத்துப் பிரதிகளைக் கோரும் சந்தர்ப்பத்தில் அவற்றுள் சிறந்தனவற்றைத் தேர்ந்தெடுத்து பிரசுரத்துக்கான நிதியை வழங்கும். அவ்வாறு இரு முறை இவருக்கு கிடைத்தது. இலங்கை தேசிய நூலக ஆவணவாக்கற் சேவை சபை இவ்வாறு கோரும். அங்கும் இரண்டு நூல்களை பிரசுரிக்க இவருக்கு நிதி கிடைத்தது. 1990இல் கௌரவ ஆளுநர் விருது, 2005இல் கலாபூஷணம் தேசிய விருதும் கிடைக்கப் பெற்றது. இவரது நூல்களுக்கும், எழுத்து முயற்சிகளுக்கும் கிடைத்த அங்கீகாரமாககவும், சமூக சிந்தனையுடன் நமது வருங்கால சமூகம் படித்துத் தெரிந்து கொள்வதற்காகக் கிராமிய வாழ்வியலை ஆய்வு செய்து எழுதியதன் விளைவாக, இவரது ஆறு நூல்களுக்கு இலங்கை சாஹித்திய மண்டல விருதும் கிடைக்கப் பெற்றன. திருகோணமலையில் இருந்து சாஹித்தி;ய விருது பெற்றவர்கள் வெகு சிலரே என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**இலங்கை சாஹித்திய மண்டல விருது பெற்ற இவரது ஆறு நூல்கள் :-**
- காட்டில் கலவரம் - சிறுவர் நாவல்
- மனதுக்கினிய பாட்டு - சிறுவர் பாடல்
- வாக்கினிலே இனிமை வேண்டும் - இளைஞர் நாவல்
- நல்லதோர் வீணை - நாவல்
- அற்புதமான வானம் - சிறுவர் அறிவியல் கதைகள்
- சிந்தனைக் கதைகள் - சிறுவர் கதைகள்

இவருக்கு இரண்டு புதல்வர்கள். இவரது மூத்த மகன் அமரர்.அருள்பாஸ்கரன் ஜஆசிரியர்ஸ, இளைய மகன் அருள்முரளி ஜவைத்தியர்ஸ இவரது மூத்த மகன்; ஒரு பிறவி ஓவியக் கலைஞர். ‘சிறுவர் சித்திரக் கூடம்’ அமைத்து பல சிறுவர் சிறுமியருக்கு ஓவியக்கலை கற்பித்தவர். அவர் ‘உதவும் உள்ளங்கள்’ என்ற சிறுவர் நூலை எழுதியவர். அதற்கு கிழக்கு மாகாண இலக்கியப் பரிசு கிடைத்தது.




அவரது மகள் இக் கலைஞரின் பேத்திகள் இரண்டு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்கள். இக் கலைஞரின் இலக்கியத்துறையில் இவரைத் தொடர்ந்து தனது முழு பங்களிப்பையும் அளித்து வந்தவர் தான் அமரர்.அருள்பாஸ்கரன் ஆவார். ஏனைய குடும்ப அங்கத்தவர்கள் இத் துறையில் ஆர்வம் இருந்தாலும் கல்வி, தொழில், நேரமின்மை, குடும்பப் பொறுப்புக்கள் போன்ற பல சூழ்நிலைக்குட்பட்டதனால் இக் கலைஞரைத் தொடர்ந்து இத் துறையினுள் நாட்டம் செலுத்திக் கொள்பவர்கள் கேள்விக்குறியாகவே உள்ளனர். இவரது எதிர்காலப் படைப்பாக ஆலங்கேணி கிராமத்தினை மையமாகக் கொண்டு எறும்புப்படை என்ற சிறுவர் நாவலையும், வான்வீதி உலா என்ற சிறுவர் நாவலையும் எழுதி வருகிறார். எனது உயிருள்ளவரை எழுத்தே என் மூச்சாக இருக்கும் என மார்புதட்டிக்; கூறிக்கொள்ளும் இக் கலைஞரின் எழுத்தில் இன்னும் வெளிவரப் பல புத்தகங்கள் அவரது கணனியினுள்ளும், அச்சிலும் அடைகாத்துக் கொண்டிருக்கின்றன.

இவர் ஒவ்வொரு நூலையும் படைக்கும் போதும் மக்களுடன் மக்களாகப் பழகி அவர்களது நடையுடை பாவனைகளைப் புரிந்து கொண்டு அவர்களையே இவரது பாத்திரங்களாகக் கொண்டு எழுதி வருவதை முக்கிய விடயமாகக் கொண்டுள்ளார். எழுது ஏனென்றால் எழுதும்போது நீ சிந்திக்கின்றாய். எழுதுவதும் ஒருவகைத் தியானமே. நாம் எழுதும் போது இந்த உடலைவிட்ட ஆன்மா வெளியெல்லாம் திரிந்து பலவித அனுபவங்களை அனுபவித்து ஆனந்திக்க வைக்கும். இலக்கியத்தை அனுபவித்து எழுதவேண்டும். நமது அனுபவம்தான் நல்ல இலக்கியத்துக்கு உதவும.; என்பதே இவரது அனுபவத்தினூடாக கண்டு கொண்ட உண்மையாகும்.

திருகோணமலையில் இலக்கியத்துறை சின்னாபின்னப்பட்டுக் கிடக்கிறது. சின்னச் சின்னக் கூட்டங்களாகச் சேர்ந்து கொண்டு ஒரு புத்தக வெளியீடு செய்வார்கள். அவர்களுக்குச் சார்பானவர்கள் மட்டும் வருவார்கள். நூல்களை எழுதுவது சுகமானது. அவற்றை அச்சிட்டுச் சந்தைப் படுத்துவது மிகவும் கஸ்டமானது. செலவிடுவது அல்லது முதலிடுவது யாரால் முடியும். அவ்வப்போது கிடைக்கும் சாஹித்திய விருதுகளில் கிடைக்கும் நிதியினால் சமாளிக்க வேண்டியுள்ளமை இவர் இத்துறையிலுள்ள இடர்பாடாக கருதுகிறார்.











இளம் எழுத்தாளர்கள் நிறையவே எழுதுகிறார்கள். அவர்களும் எழுதுவதை நூலாக்கி சந்தைப்படுத்தலில் சிக்கலில் தவிக்கிறார்கள். எழுதுவதைப் பலமுறை எழுதி படித்துத் திருத்தி எழுதிய பின்னர் சஞ்சிகைகளுக்கோ அல்லது தேசிய பத்திரிகைகளுக்கோ அனுப்பி அங்கீகாரத்தைப் பெறலாம். இன்று பல நிறுவனங்கள் அவர்களது நூல்களை வெளியிட தயாராகவே உள்ளனர். இளங்கலைஞர்கள் நன்கு வாசிக்க வேண்டும். வாசித்தவற்றையிட்டு யோசிக்க வேண்டும். அந்த நூல்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயங்களை எழுதி விமர்சிக்க வேண்டும். அந்த விமர்சனங்கள் ஆக்கபூர்வமானதாக அமைய



வேண்டும். நம் நாட்டு எழுத்தாளர்களது நூல்களை வாங்கிப் படித்து உற்சாகப் படுத்த வேண்டும் என மூத்த கலைஞராக வளர்ந்து வரும் இளங் கலைஞர்களுக்கு இவர் கூறுகிறார்.



எதிர்கால சந்ததியினர் அறிய வேண்டிய பல விடயங்களை சமூக சிந்தனையுடன் முன் நிறுத்திக் கொண்டு அதனை தனது ஆழமான, கூர்மையான எழுத்துத் திறமையால் சிறியோர் முதல் பெரியோர் வரை சலிப்பின்றி வாசிப்பதற்காக கவி பெற வடித்து அதனை நூலாகப் படைத்துள்ளார். அதனை நாம் எல்லோரும் படித்துப் பயன் பெற வேண்டும். நம் திருகோணமலை மண்ணுக்குப் பெருமையையும், அழியாப் புகழையும் அளித்து வரும் இவ் மூத்த கலைஞரின் இக் கலைப் பணி மேலும் தொடர்வதற்கான நீண்ட ஆயுளையும், தேகாரோக்கியத்தையும் பெற வேண்டுமெனப் பிரார்த்திப்பதோடு இப் பணித் தொடர வாழ்த்துவோம்.



தொகுப்பு :-
திருமலை தட்சாயினி ஞானசங்கரன்